Published On: Sunday, April 22, 2012

'சசியின் முதல் வாசகன்'

ஈழத்தின் மிகமுக்கிய கவிஞரும், விமர்சகரும், சிறுகதையாளருமான சண்முகம் சிவலிங்கம் கடந்த 20-04-2012 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார். இரவு படுக்கைக்குச் சென்றவர் காலையில் எழும்பவில்லை. மாரடைப்பு காரணமாக நித்திரையிலேயே அவர் இறந்து விட்டார்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கல்முனை நகருக்கு அருகே உள்ள பாண்டிருப் பில் 1939ம் ஆண்டில் பிறந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம், இந்தியாவின் கேரள மாநிலத்தில் உயர்கல்வி பயின்று அறிவியல் துறையில் பட்டம்பெற்றவராவர். அறிவியல் துறை ஆசிரியராக பணியில் இணைந்து பின்னர் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார்.

1960ம் ஆண்டுமுதல் கவிதை எழுதிவரும் இவரது கவிதைகள் 'நீர்வளையங்கள்' 'தமிழியல் 1988', 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' 'காலச்சுவடு 2010' என்ற சிறந்த இரண்டு கவிதை நூல்களாக இதுவரை வெளிவந்துள்ளன.

மார்க்சிய அழகியல் ரீதியில் அமைந்த விமர்சனக் கட்டுரைகளும், அழகிய சிறுகதைகள் பலவும், கையெழுத்துப் பிரதியிலுள்ள இரண்டு நாவல்களும் கவிதைகளும் நூல்வடிவம் பெறவேண்டிய நிலையில் உள்ளன.

எழுத்தாளர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் 'நீர்வளையங்கள்' கவிதைத் தொகுப்பில் பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மான் எழுதிய முன்னுரையிலிருந்து...

சமகாலத் தமிழ்க் கவிதையில் அதிக பரிச்சயமும், ஆழ்ந்த கலை உணர்வும் உள்ள வாசகனுக்கு சண்முகம் சிவலிங்கத்தின் (சசி) கவிதைகள், அவை பற்றி நான் சொல்வதை விட அதிகமாகவே சொல்ல வல்லன. என்றாலும் சசிக்கும் எனக்கும் இடையேயுள்ள தொடர்பின் காரணமாகவும் நீண்ட காலமாக நானே அவரது முதல் வாசகனாக இருந்தவன் என்பதனாலும் அவரைப்பற்றியும் அவரது கவிதைகள் பற்றியும் ஓர் அறிமுகக் குறிப்பாக சிலவற்றைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

சசியே சொல்வது போன்று அவரது கவிதைகளில் "உள்ளும் புறமுமான உணர்வுகளில் பல இடங்களில் நுழைந்திருப்பவன்" நான் நீர் வளையங்களில் அவர் விளிக்கும் நண்பன் நான்தான். நாங்கள் இரு தும்பிகளில் வரும் இரண்டாம் தும்பியும் நாந்தான். பரவளவுக் கோட்டிலும் நான் இருக்கிறேன். விலகிச் செல்லும் மையங்கள் என்னை நோக்கியதுதான். அந்த அளவுக்கு சசியும் நானும் நெருங்கி இருந்திருக்கிறோம். அவர் எனது நண்பர். என்னைவிட ஐந்து வயது அதிகமான - எனினும் தோற்றத்தில் என்னைவிட ஐந்துவயதேனும் குறைவான நண்பர். அறுபதுகளின் பின் அரைவாசியில் நாங்கள் சந்தித்தோம். கடந்த இருபதுக்கும் அதிகமான ஆண்டுகளில் கவிதை எங்கள் நட்பை வளர்த்திருக்கிறது. 1969ல் நாங்கள் இருவரும் சேர்ந்து கவிஞன் என்ற காலாண்டு இதழை வெளியிட்டோம். அதன் வெளியீட்டில் என்னைவிட அதிக பங்கு வகித்தவர் சசி.

தன் முனைப்பு அற்ற தன்னை ஒளித்துக்கொள்ளும் அவரது சுபாவத்தின் காரணமாக அதன் தொகுப்பாளராக எனது பெயரே இடம்பெற நேர்ந்தது. அவரது ஆரம்ப காலத்தில் எனது பாதிப்பு தன்னில் இருப்பதாகவும் அவரே கூறும்போதிலும் எனது ஆதர்சமாகவும் நான் விரும்பி வியந்து படிக்கும் கவிஞராகவும் அவர் விரைவாகவே வளர்ந்துவிட்டார் (எனினும் கவிதையில் எனது பாணி வேறாகவும் அவரது பாணி வேறாகவுமே இருந்து வருகின்றது. எங்கள் தனித்துவம் அப்படி.) இன்று தனது விலகிச் செல்லும் மையங்களில் என்னையும் ஒன்றாக அவர் கருதிய போதிலும் அது ஒரு பிரமைதான். என்னைப் பொறுத்தவரை இன்றும் அவர் என் நெருங்கிய நண்பர்தான். நான் மனம் நெகிழ்ந்து நினைவு கூறும் மிகச் சில நண்பர்களுள் அவரும் ஒருவர்.

சண்முகம் சிவலிங்கம் கிழக்கிலங்கையில் பாண்டிருப்பு என்னும் கிராமத்தில் 1939ல் பிறந்தவர். அவர் பிறந்தது ஒரு வைதீக இந்துக் குடும்பத்தில். அவரதுபெயரே அதைச்சொல்லும். ஆனால் இளம் வயதில்- பாடசாலை காலத்திலேயே- கத்தோலிக்கராக மதம் மாறியவர். (விலகிச் செல்லும் மையங்களில் அவர் குறிப்பிடும், பதினொரு வயதில் அவரை ஊடுருவிய நாடிவாலாவின் செல்வாக்கு அதற்குக் காரணமாக இருக்கலாம்.) அதன் பொருட்டு வீட்டில் அடி உதைகள் வாங்கியவர். ஒரு கத்தோலிக்க குடும்பத்திலேயே திருமணம் செய்து கொண்டவர். ஆறு ஆண் பிள்ளாஇகளின் தகப்பன்.

அவரது கிராமத்தில் ஸ்ரீபன்(மாஸ்டர்) என்ற கிறிஸ்தவப் பெயராலேயே இன்றைக்கும் பலர் அவரை அறிந்து வைத்திருக்கின்றனர். கேரளத்தில் படித்து

'சசியின் முதல் வாசகன்'

விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றவர் அவர். கடந்த 25 ஆண்டுகளாக விஞ்ஞான ஆசிரியராக தொழில் புரிபவர். தத்துவார்த்த ரீதியில் ஒரு பொறுள்முதல்வாதியாக பரிணமித்திருக்கிறார்.

தற்காலத் தமிழ் கவிதையில் சற்றுப் பரிச்சயம் உடையவர்கள் சசியின் கவிதைகள் வித்தியாசமாக இருப்பதை உணர்ந்து கொள்வர். அவரைப்போல் பிறிதொரு கவிஞரை, அவருடையதைப் போல் பிறிதொருவருடைய கவிதையை அடையாளம் காட்டுவது கடினம். அவருடைய தனித்துவம் அப்படி. தனித்துவமான இலங்கைத் தமிழ்க்கவிதை மரபின் ஒரு தீவிர வளர்ச்சி நிலைப் பாய்ச்சலை இவரது கவிதைகளில் காணமுடிகிறது.

அறுபதுகளின் பின் அரைவாசியில்தான் சசி கவிதை எழுதத்தொடங்கினார். அவர் ஆரம்பத்தில் எழுதிய சில கவிதைகளில் சற்றுச் செந்நெறிப் பாங்கான நடையினைக்காணமுடியும். 'கண்படுவரை நீள் கரைவாகு வட்டை' எனத் தொடங்கும் கவிதை அவ்வகையில் நான் படித்த அவரது முதலாவது கவிதை என்று நினைக்கிறேன். அது இத்தொகுப்பில் இடம் பெறவில்லை. இத்தொகுப்பில் உள்ள 'அவள் நினைவிலும்' இதன் சாயலைப் பார்க்கலாம். 'இளைய சிவப்பரும்புகளில் இலை மறையும் புதுரோசா', 'பளபளென்ற சிவப்பு நிறப் பரல் கல்லில் நீரோடும்.' இதன் மொழிதான் செந்நெறிப் பாங்கானதாக இருக்கின்றதே தவிர இக்கவிதை- இதன் அமைப்பு-தமிழுக்கு மிகவும் புதிது.

செந்நெறிப் பாங்கு சசி கவிதைகளின் ஒரு பண்பல்ல. இத்தொகுதியில் அத்தகைய கவிதைகள் அவள் நினைவு ஒன்றுதான். அதுகூட முற்றிலும் செந்நெறிப் பாங்கானது அல்ல. பொதுவாக அவரது மொழி மிகச் சாதாரணமான இன்றைய நடைமுறைத் தமிழ்தான்.

"நீ வந்திருக்கிறாய் நான் எழுதவேண்டும் ஏன்? நீயே எனது மையமா?" என்று தொடங்குகிறது ஒரு கவிதை.

"அற்ப நிகழ்வும் அர்த்த மற்றதும் என்னுடன் வருக" இவ்வாறு தொடங்குகிறது பிறிதொரு கவிதை.

"எல்லாம் முடிந்தது இனி என்ன, நாம் நடப்போம்" என்று தொடங்குகின்றது வேறொரு கவிதை.

"சந்தியில் நிற்கிறேன் பகல் சாய்கிறது"என்பது இன்னொரு கவிதையின் தொடக்கம். இப்படி பெரும்பாலும் சாதாரணமொழிதான் . ஆனால் இந்தச் சாதாரண மொழியில் அசாதாரண உணர்வுகளை எழுப்பி அந்த மொழிக்கு ஒரு அசாதாரணத் தன்மையை, ஒரு கனதியை, வேறு ஒரு பரிமாணத்தை கொடுப்பன அவரது கவிதைகள். இது மகாகவி, நீலாவாணன், முருகையன் போன்றோர் மூலம் ஈழத்தில் வளர்ச்சியடைந்த ஒரு கவிதை மரபின் தொடர்ச்சி. சண்முகம் சிவலிங்கம் இம்மரபின் உண்மையான வாரிசுகளுள் ஒருவர். அதற்கு ஒரு புதிய வளத்தைக் கொடுத்தவர். ஈழத்தில் வளர்ந்த இம்மரபு தமிழகத்தில் வளர்ந்த பாரதிதாசன் பரம்பரையினரின் சத்தற்ற எளிய செய்யுள் மரபில் இருந்து வேறானது. இதற்கு எதிராக 'எழுத்து' வளர்த்த புரியாத இருண்மைக் கவி மரபில் இருந்தும் வேறானது. பிற்காலத்தில் வானம்பாடிக் குழுவினர் வளர்த்த ஜனரஞ்சகமான அலங்கார வசன மரபில் இருந்தும் வேறானது இந்தக் கவிதைகள் முதல் பார்வையில் மிகச் சாதாரணமாக - plain ஆக தெரியக்கூடும். ஆனால் இவற்றைப் போலியாகப் பிரதிபண்ண முடியாது.

நீர்வளையங்கள் கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு கவிதை

அழைப்பு
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்
பாதி இரவினிலும் பட்டப்பகலின் அனலினிலும்
மோதித் தெறித்து
மெல்ல முனகி அழுவதுபோல்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்
பக்கத்தில் ஒரு கோயில்
அதன்பக்கத்தில் ஒரு அரவு-
சொர்க்கத்தின் வழிபோல
இலை சோவெனக் கலகலக்கும்.
சற்று அப்பால் ஆலைகளில்
சருகுதிரும்.
இடைவெளியில் திக்கற்ற கன்றொன்று
தாயைத் தேடிவரும் - அப்போதும்,
தூரத்தில் நான் கேட்டேன்.
உலகருகே நிற்பேன்,
ஊரைக்காவலிடும் தென்னைகளில்
படரும் இருள் தூரத்தில்
அஞ்சிப்பறக்கும் சிலபறவை
தொடரவரும் பிறப்பெல்லாம்
எங்கோ தூரத்தில் கேட்டதுபோல்
குரலும் அதுகேட்கும்
என் குழந்தை நினைவெல்லாம்
தூரத்தில் நான் கேட்டேன்
குரல் ஒன்று
தூரத்தில் நான் கேட்டேன்

நன்றி: தினகரன்

http://www.kizhvanam.com/

சண்முகம் சிவலிங்கம்

நான் நிரந்தரமானவன் அழிவதில்லை. எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை என்று தன்னைப்பற்றியும், மற்றும் இந்த பூமிப்பந்தில் கவிஞர்களாக, எழுத்தாழர்களாக, நடிகர்களாக, சமுகசேவை ஆய்வாளர்களாக, தலை சிறந்த விளையாட்டு வீரர்களாக, மற்றும் உண்மையான துறவிகளாக ஞானிகளாக வாழ்ந்து மறைந்த பிறருக்காகவும், கவியரசு கண்ணதாசன் அவர்கள் எழுதிய வரிகளாகவே இதை நாம் பார்க்கலாம். அண்மையில் காலமான அமரர் சண்முகம் சிவலிங்கம் அவர்களும், ஒரு நல்ல ஆசானாக, கவிஞனாக, எழுத்தாளனாகவே கல்முனைப் பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்திருக்கின்றார். ஒரு நல்லாசிரியராக மட்டுமில்லாமல், ஒரு சமூகத் தொண்டனாக மனிதநேய குணநலச்சிறப்புகள் கொண்டவராகவும், அமரர் சண்முகம் சிவலிங்கம் இருந்திருக்கின்றார்.
அமைதியான சுபாவமும், அடக்கமான பேச்சும், அவரின் அடையாளங்களாக இருந்தன.

1960களில் தனது இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டவர். கல்முனை எழுத்தாளர் சங்கம், தொடங்கிய காலகட்டத்தில் இவரும் அதில் மிக முக்கியமான பங்கு வகித்தவர். எமது பகுதி பிரபல்யமான கவிஞர்கள், எழுத்தாளர்களான அமரர்கள் நீலாவணன், பாண்டியூரான் ஆகியோருடன் நெருக்கமாக இருந்தவர். தமிழ், இலக்கியம், கிராமியக்கவிகள், நாட்டார் பாடல்கள், போன்ற துறைகளில் இவர் முன்னின்று கிழக்குமாகாண மொழிவழக்கு, அதன் பாரம்பரியம் போன்ற இலக்குகளை இவர்களுடன் சேர்ந்து முன்னெடுத்துச் சென்றவர்.

இலங்கையின் தமிழ் ஊடகங்கள் அனைத்திலும் அமரர் சண்முகம் சிவலிங்கத்தின் ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. அவை கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும், வாசகர்களை சென்றடைந்தன. அவர் நிரந்தரமானவர்தான் அவருடைய பூதவூடல் மறைந்தாலும், புகழுடம்பு மறையாது. கண்ணதாசன் சொன்னது போல் கவிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் மரணம் இல்லை. நிலமும், நீரும், காற்றும், தீயும், ஆகாயமும், இருக்கும் வரை இவர்களின் புகழ் இருக்கும். அமரர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் இழப்பு கிழக்கு மாகாண இலக்கியர்களுக்கு மட்டுமல்ல, ஈழத்து இலக்கியர்கள் அனைவருக்கும், பேரிழப்பாகவே பார்க்கத் தோன்றுகிறது. அவரின் ஆத்மா சாந்தியடைய கீழ்வானம் இணையத்தளம் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தவர்களுக்கும், தனது துயரைம், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

Thu, May 10, 2012

மண்ணை இழந்ததும்... உன்னை இழந்ததும்...
முள்ளிவாய்க்கால் மூன்றாம் ஆண்டு நினைவு

நீர் வளையங்கள் - நினைவு வளையங்கள்: சண்முகம் சிவலிங்கம்

கருணாகரன்

இலங்கையின் கிழக்கே கல்முனை நகருக்கு அருகே உள்ள பாண்டிருப்பில் பிறந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம், இந்தியாவின் கேரள மாநிலத்தில் உயர்கல்வி பயின்று அறிவியல் துறையில் பட்டம்பெற்றவர். அறிவியல் துறை ஆசிரியராக பணியில் இணைந்து பின்னர் பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார்.

00

20.04.2012 அன்று பின்னேரம் சி.ரமேஸின் தொலைபேசி அழைப்பு வந்தது. ஏதாவது இலக்கிய விசயங்கள் அல்லது யாராவது படைப்பாளிகளைப் பற்றி பேசுவதற்காக, அல்லது இலக்கியக் கூட்டங்கள், புத்தக வெளியீடுகளைப் பற்றிய தகவல்களைச் சொல்வதற்காகவே ரமேஸின் தொலைபேசி அழைப்புகள் பெரும்பாலும் வரும். சில நாட்களுக்கு முன்னர் ரமேஸின் கட்டுரை ஒன்றை பௌசருக்கு அனுப்பியிருந்தேன். ஆனால், அந்தக் கட்டுரை இன்னொரு இதழில் பிரசுரமாகிவிட்டது. இதைக் குறித்து ரமேசுடன் கதைத்திருந்தேன். ஆகவே, அதைப் பற்றித்தான் ஏதாவது பேசப் போகிறாரோ என்று நினைத்தபடி அழைப்பை உள்வாங்கினேன்.

எடுத்தவுடனேயே ரமேஸ் கேட்டார். 'உங்களுக்குச் சங்கதி ஏதாவது தெரியுமா?' என்று.

'என்ன சங்கதி? எனக்கொன்றும் தெரியாது. நீங்கள் எதைப் பற்றிக் கேட்கிறீங்கள்?' என்று பதிலுக்குக் கேட்டேன்.

'சண்முகம் சிவலிங்கம் மறைந்து விட்டார். யேசுராசா சொன்னார். யேசுராசாவுக்கு உமா வரதராஜன் சொன்னாராம்' என்றார் ரமேஸ். குரல் துயரத்தில் ஆழ்ந்திருந்தது.

காலையில் சோலைக்கிளி என்னுடன் கதைத்திருந்தார். கல்முனையில் இருந்து கிளிநொச்சிக்கு வரும் ஒரு நண்பரிடம் தன்னுடைய புத்தகங்களைக் கொடுத்திருந்த சோலைக்கிளி, அந்தப் புத்தகங்கள் கிடைத்தனவா என்று கேட்டார். ஆனால், அவர் சண்முகம் சிவலிங்கத்தைப் பற்றிப் பேசவில்லை. அந்த நேரத்தில் 'இந்தச் சேதி'யைச் சோலைக்கிளி அறிந்திருக்கவில்லை என்று நினைக்கிறேன்.

சண்முகம் சிவலிங்கம் நோயாளியாக இருந்து நான் அறிந்ததில்லை. அப்படியானால், எவ்வாறு இந்த மரணம் நிகழ்ந்தது? என்று மனம் கேட்டது.

'ஏன் என்ன நடந்தது?' என்று கேட்டேன்.

'இரவு படுத்தவர் காலையில் எழுந்திருக்கவில்லை என்று சொல்கிறார்கள்' என்றார் ரமேஸ். அதற்கு மேல் பேசத் தோன்றவில்லை இருவருக்கும். பேசத் தோன்றவில்லை என்பதற்கும் அப்பால் பேசமுடியவில்லை என்பதே உண்மை. சில நொடிகள் நீடித்த மௌனம்.



துக்கத்தையும் அந்தரிப்பையும் தரும் எதிர்பாராத செய்தி. யுத்தச் சூழலிற் சிக்கியிருந்த நாட்களில் எத்தனையோ சாவுகளைப் பார்த்திருக்கிறேன். காலடியில், கையருகில், கண்முன்னே என்று சாவுகளுடன் வாழ்ந்திருக்கிறேன். அந்த நாட்களில் இதயம் தாங்கவே முடியாத அளவுக்குத் தவித்திருக்கிறது. அதையெல்லாம் கடந்து வந்திருக்கிறேன். ஆனால், இன்று இந்தச் சாவுச் செய்தியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவ்வளவுக்கும் இது இயற்கை மரணம். ஏறக்குறைய 70 வயதைக் கடந்த நிலையில் சம்பவித்த சாவு. என்றாலும் இதைத் தாங்கிக் கொள்வதற்குக் கடினமாகவே இருக்கிறது. அகால மரணங்களற்ற ஒரு சூழல் மெல்லமெல்ல விரிந்து உருவாக்கியிருக்கும் புதிய மனநிலையா இப்படி இந்தச் சாவுச் செய்தியைப் பெரிதாக உணர வைக்கிறது? அல்லது சண்முகம் சிவலிங்கம் என்ற இழக்கக் கடினமான ஒரு ஆளுமை குறித்த உள்ளுணர்வா இந்தச் செய்தியின் கனதியை உணர வைக்கிறது? அந்தக் கணத்திலேயே அலைகள் குமுறத் தொடங்கி விட்டன. துக்கத்தைக் கொண்டு வந்த அந்த அழைப்பைச் சபித்தேன். மறுவார்த்தை எதுவும் அக்கணத்தில் தோன்றவில்லை. 'சசி'யின் முகமே நினைவில் எழுந்தது. அவருடைய கம்பீரமான உருவம், அளவான பேச்சு, நிமிர்ந்த நடை, ஏதேச்சையான நடவடிக்கைகள் எல்லாம் இணைந்த நினைவுகள்... சசியின் வயதைப் பற்றி நான் ஒருபோதுமே நினைத்ததில்லை. அவர் வயதைக் கடந்த தோற்றத்திலேயே எப்போதுமிருந்தார். அவருடைய எழுத்துகளும் அப்படியே இருந்தன. இளமை குன்றாதவர் அவர்.

'எப்போது இறுதி நிகழ்வுகள் நடக்கின்றன? யாராவது யாழ்ப்பாணத்திலிருந்து போகிறார்களா?' என்று ரமேஸைக் கேட்டபோது 'பெரும்பாலும் சித்தாந்தன் போகக் கூடும்' என்று சொன்னார்.

அதற்கு மேல் எதுவும் பேசத் தோன்றவில்லை. தொலைபேசியைத் துண்டித்து விட்டு சற்று நேரம்

அமைதியாக இருந்தேன். சசியைப் பற்றியே நினைவுகள் ஓடிக்கொண்டிருந்தன.

00

சண்முகம் சிவலிங்கத்துடன் நான் நேரில் அறிமுகமாகியது மிகப்பிந்தியே. ஆனால், அவருடைய கவிதைகள் எண்பதுகளின் முற்பகுதியில் பரிச்சயமாகியிருந்தன. முற்றிலும் மாறுபட்ட வெளிப்படுத்தலைக் கொண்ட கவிதைகளாக அவை இருந்தன. 'நண்டும் முள்முருக்கம் பூவும்' 'வெளியார் வருகை', 'ஆக்காண்டி ஆக்காண்டி', நிலவும் வழிப்போக்கனும், மறுதலை' போன்ற கவிதைகள் திரும்பத்திரும்ப அந்த நாட்களில் வாசிக்கப்பட்டவை. ஏறக்குறைய மனப்பாடம் என்ற அளவுக்குப் பல தடவைகள். அதிலும்

'எங்கள் இமைகள் கவிந்துள்ளன.

எங்கள் உதடுகள் அண்டியுள்ளன.

எங்கள் பற்களும் கண்டிப்போய் உள்ளன.

நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்.

எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக.

எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக.

எங்கள் முதுகில் கசையால் அடிக்குக,

எங்கள் முதுகுத்தோல் பிய்ந்தூந்து போகட்டும்.

தாழ்ந்த புருவங்கள் ஓர்நாள் நிமிரும்.

கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்.

இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்.

கண்டிய பற்கள் ஒருநாள் நறநறக்கும்.

அதுவரை நீங்கள் எங்களை ஆள்க.

அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக....'

- என்ற வரிகள் தொடர்ச்சியாகப் பல இடங்களிலும் பலராலும் எடுத்தாளப்பட்டதால் அந்த வரிகள் நல்ல மனப்பாடம். இந்த வரிகளை மணிரத்தினம் கூட தன்னுடைய 'கன்னத்தில் முத்தமிட்டால்' என்ற படத்தில் எடுத்தாண்டிருந்தார். உக்கிரம் தொனிக்கும் குரலில் ஒலிக்கும் இந்தக் கவிதை வரிகளுக்கேற்ற காட்சி அமையவில்லை என்ற குறை இன்னும் இருக்கிறது. சசிக்கு இந்தக் கவிதைகள் படத்திற் பயன்படுத்தப்பட்ட பின்னரே தெரியும் என்று ஒரு தடவை சொன்னார்.

'சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகள் முக்கியமானவை. ஈழக்கவிதைகளில் அவை ஒரு தனியான அடையாளத்துக்கும் வகைக்கும் உரியவை' என்று யேசுராசா அடிக்கடி சொல்வார். ஈழக்கவிதைகளைப் பற்றி அல்லது தமிழ்க் கவிதைகளைப் பற்றிப் பேச்சு வரும்போது சசியின் கவிதைகளைப் பற்றிப் பேசாமல் யேசுராசா அந்த உரையாடலை நிறைவு செய்யவே மாட்டார்.

'நீர் வளையங்கள்' என்ற அவருடைய கவிதைத் தொகுதியைத் தந்தது கூட யேசுராசாதான். 'மிக முக்கியமான கவிதை நூல்' என்று சொல்லித் தந்திருந்தார். ஆனால், சசியைப் பற்றிய விமர்சனங்களும் யேசுராசாவிற்கு இருந்தன. யேசுராசா சொன்னதையும் விட 'நீர் வளையங்கள்' முக்கியமான கவிதைத் தொகுதியாகவே இருந்தது. பின்னாட்களில் சண்முகம் சிவலிங்கத்தையும் அவருடைய கவிதைகளையும் பலரும் தங்களின் கவனப்பரப்பில் வைத்து சிறப்படையாளப்படுத்தி வந்தனர்.

இதற்குப் பல காரணங்கள் இருந்தன. அதில் முக்கியமானவை, சசியின் கவிதைகள் பிற ஈழக் கவிஞர்கள், தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளில் இருந்து தனித்து வேறுபட்ட நிலையில் தனி அடையாளத்தைக் கொண்டிருப்பதுடன், மரபார்ந்த முறையின் சாயலில் நவீன வெளிப்பாட்டு முறையைக் கொண்டவையாகவும் அவை இருந்தமையே. கூடவே சசியின் வாழ்க்கை மற்றும் சிந்தனைப் போக்கின் அடையாளத்தை அவை அடிப்படையாகக் கொண்டிந்தமையுமாகும். இதை அவருடைய 'நீர் வளையங்கள்' தொகுதியின் முன்னுரையில் அவருடைய நெருங்கிய சகாவும் – சக பயணியுமாகிய எம். ஏ. நுஃமான் குறிப்பிட்டுள்ளார். சசியையும் அவருடைய கவிதைகளையும் மிக நுட்பமாக வாசகருக்கு இடையுறும் திசைமாற்றலும் இல்லாத வகையில் வெளிப்படுத்தும் முன்னுரை அது.

இன்னொரு காரணம் சசி என்றும் எதற்கும் தயங்காமல், மற்றவர்கள் கையாளக் கூச்சப்படும் பொருட்பரப்பில் இளமை குன்றாமல் எழுதி வந்தமை. முக்கியமாகப் பால்நிலை மற்றும் பாலியல் தொடர்பான விசயங்களில் அவர் பல சிறுகதைகளை எழுதினார். ஆனால், அவை விரச நோக்கத்துக்காக எழுதப்பட்டவையல்ல. வாழ்வின் அடிப்படைகளை நோக்கிய பார்வையும் பயணமுமே சசியின் எழுத்துலகம் என்பதால் அதை மையப்படுத்தியே அவர் எழுதினார். அதைச் சாராம்சப்படுத்தியே அவர் இயங்கினார்.

சசியின் படைப்பியக்கத்திலும் வாழ்வியக்கத்திலும் கூடுதற் பங்கேற்பாளராக இருந்தவர் கலாநிதி எம்.ஏ. நுஃமான். இது சசிக்கு இன்னும் அதிக வளத்தையும் பலத்தையும் வாய்ப்புகளையும் கொடுத்தது. பின்னாட்களில் சற்று விலகல்கள் இருந்தபோதும் அடியோட்டமாக இருந்த நெருக்கங்கள் குறைந்ததில்லை என்பது என்னுடைய அவதானிப்பு. நுஃமானை விலக்கிவிட்டு சசியைப் பற்றிச் சிந்திக்க முடியாது. அல்லது சசியை விலக்கி விட்டு நாம் நுஃமானைப் பற்றி எண்ண முடியாது என்ற அளவுக்கான நட்பும் நெருக்கமும் உறவும் பங்கேற்பும் செயற்பாடுகளும் இருவருக்குமிடையில். பின்னாட்களில் எம்.ஐ.றவுப் சசியுடன் நெருக்கமாக இருந்தார் என்று சொல்லப்படுகிறது.

சண்முகம் சிவலிங்கத்தைப் பற்றி அதிகமாகச் சொன்னவர் சு. மகேந்திரன். பல சுவாரஷ்யமான கதைகள், சுவாரஷ்யமான நிகழ்ச்சிகள். எளிதில் மறக்க

முடியாதவை அவை. மகேந்திரனுக்கூடாக ஒரு வேறுபட்ட – வித்தியாசமான சித்திரம் சசியைப் பற்றி அப்போது உருவாகியிருந்தது.

மகேந்திரன் கல்முனையிலும் அக்கரைப்பற்றிலும் படிப்பித்த காலத்தில் சண்முகம் சிவலிங்கத்துடன் உறவாகியிருந்தார். அந்த உறவின் தொடக்கத்துக்குக் காரணம் உமா வரதராஜன் என்று மகேந்திரன் சொன்னதாக நினைவு. ஒரு சமயம் இருவரும் ஒரே கல்லூரியிற் படிப்பித்திருக்கிறார்கள். மகேந்திரன் தங்கிய விடுதியில் சசியும் சில நாட்களில் தங்கியிருக்கிறார். சசி தன் இஸ்ரப்படி வாழும் இயல்புள்ள ஒருவர் என்றேன். ஒரு தாராளி. கட்டற்ற – தாராள சுதந்திரத்தன்மை வாய்ந்த வாழ்க்கை அவருடையது என்பது மகேந்திரனின் அனுபவமும் அபிப்பிராயமும். இதைப் பின்னாளில் வேறு பலரும் சொன்னார்கள்.

வீட்டில் ஏதாவது தகராறு என்றால் அல்லது வீட்டில் இருப்புக் கொள்ள முடியாத உணர்வு அவருக்கு ஏற்பட்டிருந்தால், இரவு எந்த வேளையிலும் - இரவு 12 மணிக்கோ 2 மணிக்கோ கூட வந்து கதவைத் தட்டுவாராம். அந்த நேரத்தில் வீட்டை விட்டு வெளியேறலாமா அல்லது அந்த நேரத்திற் போய் யாரையாவது எழுப்பலாமா, எழுப்பி அவர்களுடன் தங்கக் கேட்கலாமா அல்லது அவர்களைக் கொண்டே தனக்கான உதவிகளைச் செய்விக்கலாமா, அது அவர்களுக்குச் சிரமத்தை அளிக்குமா என்றெல்லாம் அவர் யோசிப்பதில்லை. இதைக்குறித்து அவர் எதற்கும் தயங்குவதுமில்லை.

அவரைப் பொறுத்தவரை தன்னுடைய நெருக்கடிகளிலிருந்து அவர் விலக் கொள்வதற்கே அதிகமும் அந்தக் கணங்களில் விரும்பியிருக்கிறார். அது அவருக்குத் தவிர்க்க முடியாதது. இதேவேளை மற்றவர்களுக்கும் தனக்கும் இடையில் அவர் எந்த விதமான திரைகளையும் ஆட விடவில்லை. வெளிப்படையாக செயற்பட்டு – அந்த வெளிப்படையில் தன்னியல்பை முன்னிறுத்தி, அவர் கொண்டிருந்த உறவை நம்பி அல்லது அதை வலியுறுத்தி அவர் வாழ்ந்தார். ஆகவே அவர் நண்பர்களிடத்தில் அதிக உரிமையைக் கொண்டாடினார். சிலவேளை இந்த அதீத உறவினாலும் உரிமை பாராட்டலினாலும் சில நண்பர்கள் அவரையிட்டுக் குறைப்பட்டதுண்டு. ஆனாலும் யாரும் அவரைத் தூர விலக்கி வைக்கவில்லை. ஏனெனில் அவர் அடிப்படையில் மனிதாபிமானத்தையும் நல்லியல்புகளையும் பேணினார். அதற்கு மாறாக அவர் விலகிச் செல்லவில்லை. ஆகவே என்னதானிருந்தாலும் சசியுடன் அவர்களால் தங்கள் நெருக்கத்தைக் குறைத்துக் கொள்ள முடியவேயில்லை.

'சண்முகம் சிவலிங்கம் கல்முனையில் கொடிகட்டிப் பறந்த ஒரு ஆள். அவரை எதிர்த்து ஒரு பயல் மறுபேச்சுப் பேசமாட்டான். அவரிட்டப் படிச்சவனும் கதை கேட்டவனுந்தான் கல்முனையில அநேகம்பேர்' என்று ஒரு தடவை நற்பிட்டிமுனை பளீல் என்னிடம் சொன்னார்.

சண்முகம் சிவலிங்கத்திடம் படிக்காதவர்களே கல்முனையில் இல்லை என்ற அளவுக்கு ஒரு காலத்தில் நிலைமை இருந்தது என்று பெரும்பாலான கல்முனைவாசிகள் சொல்வார்கள். தமிழர்கள், முஸ்லிம்கள் என்று இரண்டு தரப்பிலும் ஏராளமானவர்கள் அவரிடம் படித்திருந்தார்கள். அல்லது பழகியிருந்தார்கள். பின்னர் கிழக்கில் இலக்கியத்தில் ஈடுபட்டவர்களிற் பெரும்பாலானவர்கள் சண்முகம் சிவலிங்கத்தை ஆதர்சமாகக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் றஷ்மியின் கவிதைகளைப் பற்றி நான் எழுதிய கட்டுரையைக் குறித்து அவருடன் கதைத்தபோது றஷ்மி சொன்னார், 'ஒரு காலத்தில் சண்முகம் சிவலிங்கத்தை மிகத் தீவிரமாக வாசித்திருக்கிறேன். சில கவிதைகள் மனப்பாடமாகும் அளவுக்குத் திரும்பத்திரும்ப வாசித்திருக்கிறேன்' என்று. இப்படித்தான் பெரும்பாலான கிழக்குப் படைப்பாளிகள் சசியுடன் இருந்திருக்கிறார்கள். அவரைப் படித்தும் பழகியும் அவருடன் வாழ்ந்தும்.

இந்த மாதிரியான காரணங்களினால், சண்முகம் சிவலிங்கம் தமிழர்களாலும் விரும்பப்பட்டார். மதிக்கப்பட்டார். முஸ்லிம்களாலும் விரும்பப்பட்டார். மதிக்கப்பட்டார். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மனிதராக – ஒரு கவிஞராக அவர் இருந்தார்.

இவ்வளவுக்கும் சசியின் ஒரு மகன் 1985 காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்து இறந்தவர். இந்த இழப்பையிட்டுச் சசி அடைந்த மனப் பாதிப்பு மிகப் பெரிது. ஆனால், இந்த நிகழ்ச்சியையிட்டு சசியை எல்லோரும் நெருக்கத்தோடும் அனுதாபத்தோடும் அணுகினார்களே தவிர, மகனின் அடையாளத்தை வைத்து யாரும் பழகவில்லை. பின்னாட்களில் துயரந்தோய்ந்த விதமாக கிழக்கிலும் உருவாகிய தமிழ் - முஸ்லிம் இடைவெளி நிலைகளில்கூட சசி நெருக்கடியற்றே இருந்தார். எந்தக் கொந்தளிப்பான நிலைமையிலும் அவர் இரண்டு சமூகங்களிடையேயும் ஊடாடக்கூடிய ஒருவராக – ஊடாடும் ஒருவராகவே இருந்தார் என்று அவரை எப்போதும் பெருமையோடு நினைவு கூர்வர் பல நண்பர்கள்.

இதெல்லாம் அவருக்கு அந்தப் பகுதியில் மிகப் பெரிய செல்வாக்கும் மரியாதையும் தந்திருந்தது. இன்றைக்கும் இந்த மதிப்புண்டு. ஆனால், சசி இதையெல்லாம் முதலீடாக்கித் தன்னுடைய காரியங்களைப் பார்த்துத் தன்னை முன்னோக்கித் தள்ளுவதற்குப் பயன்படுத்தவில்லை. பதிலாக அவர் இறுதிவரையில் ஒரு பழைய சைக்கிளிலேயே கல்முனையின் தெருக்களில் அமைதியாகத் திரிந்திருக்கிறார். அவருடைய மறைவுக்குப் பிறகு எழுதப்பட்ட இரண்டு குறிப்புகளில் இதைச் சான்றாக்குகின்றன.

சசிக்கு

சீரற்றுக் குலைந்த இதயத்தின் பெருந்துடிப்பு

மூன்றாம் யாமத்தில் என்னை எழுப்பியபோது

முகமும் நினைவும் வியர்வையில் நனைய

தலைமாட்டில் எப்போதும் இருக்கும்

நைட்ரோகிளிசரீனைப் பற்றுகிறேன்

அது சிவப்பு நிறம்

சசி,

உன்னுடையதும் சிவப்பு நிறமா?

நேற்றிரவு

தூரத்தில் இரைகிற கடல் இல்லை

வியப்பு இல்லை

பரல் கற்களின் மீது சொற்களற்றுப் புரண்டு செல்லும்

சிற்றாறு இல்லை

கலவி முடிந்த பின்

தூக்கத்தில் துவண்டிருக்கும் அவள் மீது

நீ வீசியெறிந்த சாரம்

கவிதைக்குள் ஒளிந்து விட்டது

மகனின் இருமல் நின்றுபோய்

நீண்ட நாளாகி விட்டது

அவனைக் கொண்டுபோன காற்றும் நெருப்பும்

உன் வாயிலுக்கு வராது

படையினர் மட்டுமே கேலிச் சிரிப்புடன்

அலையும் நடு இரவில்

மெல்லிய சாராய மணத்துடன்

தெருவில் இருந்து ஒழுங்கைக்குள் திரும்புகிறது

ஒரு சைக்கிள்

அதில் நீ இல்லை.

சேரன், 20-04-2012

தெருவிளக்கின் மங்கலான வெளிச்சத்தில்

இரவு எட்டு மணியளவில்

பழைய ஒரு சைக்கிளில் இருக்கும் 'உடலொ'ன்று

தீவிரமான சிந்தனையுடன் என் வீட்டை, என்னைக் கடந்து செல்லும்.

அதன் 'உயிர்' வாசம் கழிந்ததெல்லாம் முற்று முழுக்க கவிதையின் அடர் காட்டில்.

இனி எங்கே காண்பேன் அதை?

இந்த இரவில் எனது தெரு வெறிச்சோடிப் போய்க் கிடக்கின்றது.

- உமா வரதராஜன்

00

சசியை நான் நேரிற் சந்தித்தது 1990 இல். அது. பிரேமதாஸ அரசுடனான பேச்சுவார்த்தைக் காலம். இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையை விட்டு வெளியேறியிருந்த சூழல். சற்று நிலவிய அமைதிச் சூழலில் நான் கல்முனைக்குப் போயிருந்தபோது மு.சடாட்சரத்தையும் சண்முகம் சிவலிங்கத்தையும் சந்தித்தேன். மிகச் சாதுவான மனிதராக, பவ்வியமாக வெள்ளை வேட்டி அரைக் கைச் சட்டையுடன் இருந்தார் சடாட்சரம். தமிழரசுக் கட்சியின் அரசியலில் மெல்லிய ஈடுபாடு கொண்டவராகத் தெரிந்தார். தணிந்த குரலில் அதிர்வின்றி, அளவாகக் கதைத்தார். சடாட்சரமே சண்முகம் சிவலிங்கத்திடம் அழைத்துச் சென்றார்.

அது ஒரு மாலை நேரம். பாண்டிருப்பில் உள்ள அவருடைய வீட்டிற்குப் போயிருந்த போது 'பற்றிக்' டிசைன் போட்ட சாறம் உடுத்தியிருந்தார். மேலே பழுப்பு நீல நிறத்தில் அரைக் கைச் சட்டை. நாங்கள் போனபோது எதையோ வாசித்துக் கொண்டிருந்தார். எங்களைக் கண்டவுடன் வரவேற்றார். என்னை அவருக்கு அறிமுகமில்லை. சடாட்சரம் அறிமுகப்படுத்தினார். அந்த அறிமுகத்தினூடாக எதையும் விளங்கிக் கொண்டதாக இல்லை என முகக்குறிப்புகள் சொல்லின.

தலையை அசைத்து வரவேற்றார். பாதிக்கு அவருடைய மெல்லிய புன்னகை ஒத்துழைத்தது. முதல் அறிமுகத்திலேயே கறாராகப் பேசினார். ஆனால், நிதானமான, ஆழமான பேச்சு. அவருடைய கவிதைகளைப் பற்றிச் சொன்னேன். அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். சில கவிதைகளைக் குறித்துக் கேட்டேன். 'வாசியுங்கள் புரியும்' என்று சொல்லி மெல்லிய கேலிப் புன்னகையைச் சிந்தினார். எனக்குச் சற்றுக் கூச்சமாகவும் அதேவேளை சற்று எரிச்சலாகவும் இருந்தது. ஆனால், அதற்கு மேல் எதையும் நான் பேசவில்லை.

'சடாட்சரத்தைப் போல என்னால் எழுத முடியாது. சண்முகம் சிவலிங்கம் என்றால் அப்படித்தான் எழுதுவான்' என்றார் சசி. சடாட்சரம் ஒன்றுமே பேசவில்லை. பதிலாக என்னைப் பார்த்தார். எனக்கு ஒரு மாதிரியாக – சங்கடமாக இருந்தது. அந்த நிலைமையை எதிர்கொள்ள முடியாமற் தவித்தேன். ஒருவாறு சமாளித்துக் கொஞ்சநேரம் பேசி விட்டு முகவரியைக் குறித்துக் கொண்டு விடைபெற்று வந்தோம். வரும்வழியில் சடாட்சரம் சொன்னார், 'நல்ல கவிஞன். அவனைப் போல எழுதவே முடியாது' என்று.

அன்று மாலை நற்பிட்டிமுனை பளீலிடம் இதைப் பற்றிச் சொன்னேன். அவர் சிரித்தார். 'இது உங்களுக்குப் புதிசாக இருக்கும். அவர் இந்த மாதிரிக் குறும்புகள் பலதைச் செய்வார். ஆனால், நாங்கள் யாரும் அவரைக் கோவித்துக் கொள்வதில்லை' என்றார் பளீல். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவருடைய கறுத்தப் புள்ளிகளை மீண்டும் படித்தபோது அவருடைய சிரிப்புக்கான அர்த்தம் மேலும் விளங்கியது. இதைப் புரிந்தபோது நானே சிரித்தேன்.

பின்னர் சசியை நான் சந்தித்தது நீண்ட இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாணத்தில். மானுடத்தின் தமிழ்க்கூடல் என்ற நிகழ்வுக்காக வந்திருந்தார். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் பின்னர் அவர் தங்கியிருந்த விடுதியிலும் அவரைச் சந்தித்தேன். பல விசயங்களைப் பற்றியும் பேசினோம். அவருடைய கதைகளைப் பற்றியே அப்போது அதிகமாகக் கதைத்தோம். நாவல் எழுதுவதாகச் சொன்னார். கிழக்கே வந்தால் வீட்டுக்கு வருமாறு சொல்லிச் சென்றார். கடிதங்களை எழுதிக்கொண்டிருந்தோம்.

2004 இல் நான் மறுபடியும் கிழக்குக்குச் சென்றபோது கல்முனையில் சசியைச் சந்திக்க முயன்றேன். சுனாமிக்கு முதல்நாள் - நத்தார் அன்று பின்னேரம் உமா வரதராஜன் வீட்டில் ஒரு சந்திப்பு நடந்தது. அதில் சோலைக்கிளி, விஜிலி, சடாட்சரம் போன்றவர்கள் வந்திருந்தார்கள். பளீல் வருவதாகச் சொல்லியிருந்தபோதும் ஏதோ காரணங்களால் வரமுடியாதிருந்தார். நான் எதிர்பார்த்த – அதிகம் விரும்பியிருந்த சண்முகம் சிவலிங்கம் வரவில்லை. உமா வரதராஜனிடமும் ஏனைய நண்பர்களிடமும் விசாரித்தேன். யாரும் சரியாகப் பதில் சொல்லவில்லை. 'தகவல் சொல்லியிருந்தோம். ஆனால் வரவில்லை' என்றார்கள்.

என்னுடன் கூடவே வந்த நண்பர்களுடன் இரவு அவருடைய வீட்டுக்குச் சென்றேன். கண்டதும் சந்தோசப்பட்டார். அன்பாக எல்லோரையும் விசாரித்தார். பலவற்றைப் பற்றியும் கதைத்தோம். 'புதிதாக என்ன எழுதினீங்க' என்று கேட்டார். அந்தக் கேள்வியை அவரிடம் நான் கேட்க இருந்தேன். ஆனால், அவர் முந்திக் கொண்டார். அப்போது சமாதானப் பேச்சுகளின் நிலைமையைக் குறித்து 'விழியோடிருத்தல்' என ஒரு நெடிய கவிதையை எழுதியிருந்தேன். அதைப்பற்றிச் சொன்னேன். தலையை ஆட்டி ஆழமாக யோசித்தார். முகம் வாடியது. நிலைமைகள் பாதகமான நிலைமையை நோக்கிச் சரிவடைந்து செல்வதையிட்ட வாட்டம் அது.

இரவு சாப்பிடுமாறு கேட்டார். 'நாங்கள் அக்கரைப்பற்றுக்குச் செல்ல வேணும்' என்று சொல்லி விடைபெற்றோம். ஆனால் எதிர்பார்த்தவாறு எங்களால் அக்கரைப்பற்றுக்குச் செல்ல முடியவில்லை. வாகனத்தில் போகமுடியாது. பாதை சீரில்லை என்று அதிரடிப்படையினர் தடுத்து விட்டனர். அன்றிரவு கல்முனையில்தான் தங்கினோம். ஆனால், இரவு மீண்டும் சசியிடம் செல்வோமா என்று யோசித்தபோதும் போகமுடியவில்லை. மறுநாள் சுனாமி. மதியம்போல் உமா வரதராஜனை விசாரித்து நிலைமைகளை – சசியைப்பற்றியும் அறிந்தேன்.

பின்னர் நான் சசியைக் காணவேயில்லை. இடையிடையே தொலைபேசியில் கதைத்திருக்கிறோம். சில கடிதங்கள். பிறகு யுத்தம். தொடர்பு அறுந்து விட்டது. அகதி முகாமிலிருந்து மீண்ட பிறகு மீண்டும் இடையிடையே தொலைபேசியில் உரையாடல். சில கடிதங்கள். தாமதமான பதில்கள். அவ்வளவுதான். சிலவேளை உற்சாகமாகக் கதைப்பார். சில சமயம் புரிந்து கொள்ள முடியாதவாறு சோர்வாக உரையாடுவார். குழப்பங்களும் கவலைகளுமான உணர்வு. எழுதிய கதைகளை வெளியிட வேண்டும் என்று சொன்னார். இன்னும் சில விசயங்களைப் பற்றி எழுதப்போகிறேன் என்று சொன்னார். கல்முனைக்குப் போகவேண்டும். நண்பர்களைச் சந்திக்க வேண்டும். சசியுடன் விரிவாக - ஆழமாக உரையாடவேணும் என்றெல்லாம் நினைத்திருந்தேன். சாத்தியங்கள் விலகிக் கொண்டேயிருந்தன. அவருடைய கவிதைகளின் புத்தகமொன்று 'சிதைந்து போன தேசமும் தூர்ந்து போன மனக்குகையும்' காலச்சுவடு வெளியீடாக வெளியாகியிருந்தது. ஆனாலும் அது இன்னும் கிடைக்கவில்லை.

00

சசியின் கவிதைகள் தமிழ்க்கவிதைப் பரப்பிலும் ஈழக்கவிதைகளிடத்திலும் முக்கியமானவை என்றேன். பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தைக் கொண்டிருந்த சசி வாழ்வின் சவால்களை இருத்தலியம் சார்ந்து எழுதினார். அந்தக் கண்ணோட்டத்திலேயே அவருடைய தேசிய இனப்பிரச்னையைப் பற்றிய கவிதைகளும் அமைந்தன. ஆக்காண்டி, ஆனையிறவு, காவல் அரண், பிள்ளைக்கறி எனப் பல இதற்குதாரணம். 1970 களிலேயே வெளியார் வருகையைப் பற்றி எழுதியவர் சண்முகம் சிவலிங்கம். இந்த வெளியார் வருகையில் வரும் ஒரு அடியில் இருந்தே 'மரணத்துள் வாழ்வோம்' என்ற பெயர் எடுத்தாளப்பட்டு 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுதி உருவாக்கப்பட்டது.

அவருடைய ஆக்காண்டி ஆக்காண்டி என்ற நாட்டுப்புறப்பாடல் வடிவில் அமைந்த கவிதை இலங்கையின் இனப்பிரச்சினை, ஈழப்போராட்ட நிகழ்வுகளையும் நிலைமையையும் மையப்படுத்தியது. பல நாடகங்களிலும் இந்தக் கவிதை பலராலும் எடுத்தாளப்பட்டது. வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சசியின் கவிதைகளைப் பலரும் பயன்படுத்தியிருக்கிறார்கள். நானும்கூட எடுத்தாண்டிருக்கிறேன். அத்தகைய பன்முகத்தன்மையும் நெகிழ்ச்சியுமுடைய கவிதைகள்.

00

சசியின் இறுதி நிகழ்வுக்குப் போக விரும்பியிருந்த போதும் சாத்தியப்படவில்லை. சு.மகேந்திரன் போயிருந்தார். கிழக்கில் பெரும்பாலான படைப்பாளிகளும் கவிஞர்களும் அங்கே கூடினார்கள். அவருடைய இறுதிப் பயணம் மிக மதிக்கப்பட்ட நிலையில் அமைந்தது. ஏராளமான அஞ்சலிக் குறிப்புகளும் நினைவு கூருதல்களும் இணைய வெளியில் நிறைந்து கிடக்கின்றன.

இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியாதிருந்த நானும் பௌசரும் சீவகனும் அவருக்கான அஞ்சலியை பிபிஸியில் கொண்டு வந்தோம். தகவலைச் சொன்னபோது சீவகன், உரிய முறையில் புரிந்துகொண்டு, நுஃமானைத் தொடர்பு கொண்டு அவரின் மூலமாக சசிக்கான அஞ்சலியை - இறுதி வணக்கத்துக்குரிய செய்தியை வெளியிட்டார்.

இன்று சசி எங்களுடன் இல்லை. ஆனால், அவர் எங்களுடன்தான் இருக்கிறார். எங்களுடனேயே இருப்பார். சண்முகம் சிவலிங்கம் என்ற கவிஞனுக்கு என்றும் மரணமில்லை. சாவின் நிழல் சசியின் கவிதைகளைத் தீண்டிவிட முடியாது. அவருடைய எழுத்தியக்கத்தின் சாரத்தையும். மீண்டும் 'நீர்வளையங்களை' ப் படிக்கிறேன். இளமையும் புதுமையும் குன்றா அதே ஒளியுடனும் சுவையுடனும் சசியை நினைவுட்டிக் கொண்டேயிருக்கின்றன

00

4/23/2012 12:58:28 AM

நண்பருக்குப் பரிந்துரைக்க:

முந்தய பதிவுகள்

சந்திரா இரவீந்திரனின் 'நிலவுக்குத் தெரியும்' சிறுகதைத் தொகுப்பு

வாசகர் கருத்து:

தோழன் கவிஞன் கருணாகரன் அமரர் கவினிஞன் சண்முகம் சிவலிங்கம் அவர்களுக்கு எழுதிய அஞ்சலியைப் வாசித்தபோது மனசை வியாகூலம் நிறைத்தது. கவிஞரை நான் நேரில் சந்தித்தது 1981ம் ஆண்டு அம்பாறையில் நடந்த இனக்கலவர காலத்திலாகும். அந்த சந்தர்ப்பத்தில் கல்முனையில் நானும் மேர்ஜ் தோழர்களும் ஒரு அகதி முகாம் அமைத்திருந்தோம். இராணுவ நெருக்கடி மிக்க அந்த சூழல் உறவாட உகந்ததாக இருக்கவில்லை. எனினும் எமது அவசரச் சந்திப்புகளில் நாம் நட்ப்பை உணர்ந்தோம். பின்னர் கல்முனைக்குச் சென்றபோது ஓரிரு தடவைகள் என் நெருங்கிய நண்பன் உமா வரதராசனுடன் அவரைப் போய்ப் பார்த்திருக்கிறேன். அவருடைய வாழ்வு இயல் அதுபற்றிய எல்லாருடைய விமர்சனங்களுக்கும் மேலாக ஒரு கவிஞனுக்குரியது என்பதை ஒவ்வொரு சந்திப்பின்போதும் நான் உணரத் தவறவில்லை.

எங்கள் இறுதிச் சந்திப்பு இலக்கியம் சார்ந்ததில்லை. சமாதான பேச்சுவார்த்தைக் காலம் என்று ஞாபகம் கல்முனைக்கு சென்றிருந்தேன். பகல் முழுக்க தமிழ் முஸ்லிம் நண்பர்கள் என கலகலப்பாகக் கழிந்தது. இரவு வளமைபோல உமாவரதராசனுன் தங்குவதாக இருந்தேன். சோலைக்கிழியும் முஸ்லிம் நண்பர்களும் மாலை என்னைத்தேடி வந்துவிட்டார்கள். கல்முனை தமிழ் பகுதியில் தங்குவது எனக்கு ஆபத்தாகலாம் என்கிற அச்சம் அவர்களை அலைக்களித்தது. என்னை தங்களோடு வந்துவிடும்படி வற்புறுத்தினார்கள். இறுதியில் உமாவரதராசன் கவிஞர் சசியிடம் கேட்டுவருவதாக என்னை அழைத்துச் சென்றார். எங்களை வரவேற்ற சண்முகம் செல்பேசியுடன் எழுந்து பின்னே சென்றார். திரும்பிவந்த சண்முகம்சிவலீங்கம் புன்னகையுடன் ஜெயபாலனுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை அவர் உன்னோடு தங்கலாம் என்று உமாவரதராசனிடம் சொன்னார்.

ஜெயபாலனுக்கு பிரச்சினை இல்லையென்று சண்முகம் சிவலிங்கம் சொன்னார் என்றதும் கவிஞர் சோலைக்கிளியும் நண்பர்களும் திருப்தியோடு விடைபெற்றார்கள். என் முஸ்லிம் நண்பர்கள் சண்முகம் சிவலிங்கத்தின் வார்த்தையில் வைத்திருந்த நம்பிக்கை என்னை ஆச்சரியப் பட வைத்தது. சண்முகம் சிவலிங்கம் எழுதிய சில கவிதைகளை மட்டுமே வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருக்கு. என் மனதில் இன்றுவரைக்கும் ஆழமாக பதிந்திருக்கிற விடயம் அமரர் சண்முகம் சிவலிங்கம் எப்பவும் மிடுக்குள்ள ஒரு கவிஞனாக வாழ்ந்தார் என்பது மட்டும்தான்.

வ.ஐ.ச.ஜெயபாலன், சென்னை 5/6/2012 1:01:00 PM

http://ponguthamil.com/shownewscontent.aspx?sectionid=9&contentid=44a8b34d-7364-4ff1-b8ee-fe6d812dbd64

Thu, May 10, 2012

இன்று மிகத் துயருற்றேன் (சண்முகம் சிவலிங்கம் நினைவாக)

மு.புஷ்பராஜன்

பொதுவாக, மனதை அதிர வைக்கும் செய்தி எதுவென்றால், அது நம் பிரியத்துக்குரியவரின் மரணச் செய்திதான். சண்முகம் சிவலிங்கம் காலமான செய்தி எனக்கு ஏற்படுத்திய உணர்வும் அதுதான். என் மனம் இந்த வரிகளை மீட்டிக்கொண்டது.

இன்று மிகத் துயருற்றேன்

என் இனிய நண்பா,

இவ்விரவின் நிலவெளியில் என்னுடன் நீ இருந்தால்

வெண்பனியின் துளிசொட்டும்

பூங்கொத்தைப் போன்று விம்முகிற என்நெஞ்சில்

ஆறுதல்கள் தருவாய்

சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளில் ஈடுபாடு கொண்டவர்கள், அவரவர் மனநிலைக்கக ஏற்ற விதமாக வேறு வரிகளை நினைவு கொள்ளலாம். சண்முகம் சிவலிங்கத்தின் இந்த கவித்துவ வரிகள், அவரது நன்பன் எம்.ஏ. நுஃமானை நினைத்து எழுதியவையே. அதில், 'என் இனிய அன்பே' என்றுதான் இருந்தது. சண்முகம் சிவலிங்கத்திற்கும் எனக்குமான நட்பில் அன்பே என்ற சொற்பிரயோகம் பொருத்தமற்றதனால் நண்பா என மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

இந்த 'நீர்வளையங்கள்' என்ற கவிதை என்னால் தொகுக்கப்பட்ட 'நெய்தல்' என்ற சிறப்பு மலரில் வெளிவந்ததே. சண்முகம் சிவலிங்கத்தை அவர்களது (நுஃமானையும் இணைத்து) 'கவிஞன்' இதழிலிருந்து அறிந்தகொண்டாலும் அவர் தனது கவித்துவம் செறிந்த கவிதைகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், விமர்சனங்கள் ஆகியவைகள் மூலம் வியப்பையும் விருப்பையும் ஏற்படுத்தினார். பின்னர் எங்களது 'அலை' இதழ் மூலம் ஏற்பட்ட தொடர்பு மேலும் மனரீதியான நெருக்கத்தை ஏற்படுத்தியது. ஆயினும், அவரைச் சந்தித்துக்கொண்டது நிர்மலா, நித்தியானந்தன் ஆகியோர்கள் வாழ்ந்த மாமரங்களின் நிழல் கவிந்த வீட்டில்தான். அந்நாட்களில், ஒரு மத்தியான வெய்யிலில் அவர் சைக்கிளில் என் வீடிதேடி வந்ததும் இன்றும் நினைவில் உண்டு.

தன் கவிதைகள் மூலம், எழுபதுகளில் இயங்கிக்கொண்டிருந்த படைப்பாளிகள் மத்தியில் மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்தியவர் சண்முகம் சிவலிங்கம். அவருடைய 'காற்றிடையே', 'ஆக்காண்டி ஆக்காண்டி' 'வெளியார் வருகை' போன்ற கவிதைகளை வியந்த நவீன இலக்கிய படைப்பாளிகள் அநேகர். அவரது காற்றிடையே, ஆக்காண்டி ஆக்காண்டி ஆகிய கவிதைகளின் பாதிப்பை பல நவீன கவிஞர்களின் கவிதைகளில் இலகுவாகக் கண்டுகொள்ளலாம். மார்க்சியக் கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகள், பிரச்சாரமின்றிக் கவித்துவம் வாய்ந்த கவிதையாக இருக்கவேண்டும் என்பதற்கு இவரது ஆக்காண்டி ஆக்காண்டி கவிதையே ஒரு அசலான எடுத்துக்காட்டு.

இன்று தலைமுறை தாண்டியும் பேசப்படும் 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுப்பின் தலைப்பு, இவரது வெளியார் வருகை கவிதையில்

இருந்தே எடுத்தாளப்பட்டது. அவரது வெளியார் வருகை கவிதை இன்றும் காலச் சூழலுக்குப் பொருத்தமாகப் புதிய அர்த்தத்தைத் தன்னுள் கொண்டு நிற்கின்றது. சண்முகம் சிவலிங்கம் மார்க்சியத்தில் நம்பிக்கை கொண்டிருந்தவர். அக்கால மார்க்சியப் 'பிதாப்பிதாக்களுக்கு' புதுக்கவிதை வெறுப்புக்குரியவையாக இருந்தபொழுதும் இவர் புதுக்கவிதையில் பெரிதும் ஈடுபாடு காட்டினார். இவரது அக்காலக் கவிதைகள் மரபுவழிக் கவிதைக்கும் புதுக்கவிதைப் போக்கிற்கும் இடைப்பட்ட இருகரையும் தழுவி வழியும் போக்கினைக் கொண்டிருந்தது. அவரது பிற்காலக் கவிதைகள், அதாவது 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' தொகுப்பின் கவிதைகள் மரபுக்கவிதையில் இருந்து விலகி விட்டதை உணர்த்துகிறது.

சண்முகம் சிவலிங்கம் மார்க்சிய ஈடுபாடு கொண்டிருந்தாலும் படைப்புத் தளத்தில் தமது பிதாப்பிதாக்களின் இறுகிய கோட்பாட்டு நிலையினை வழிபாடு செய்யாமல், தனது சுய அறிவுசார்ந்து மீறிக்கொண்டே இருந்தார். நுஃமானும் அவ்வாறே. மஹாகவியை மார்க்சிய கடும் விமர்சனக் காவலர்களின் புறக்கணிப்புச் சிறையில் இருந்து, அவரை மகிமை ஒளியோடு மீட்டுக்கொண்டு வந்தவர்கள் இந்த கிழக்கு மாகாண இலக்கிய இரட்டையர்கள்தான். மஹாகவியின் கவிதையை விரும்பி இருந்தவர்களும் இந்த விமர்சனக் காவலர்களின் கோபப் பார்வைக்கு அஞ்சி மௌன விரதம் இருந்தவேளை, மஹாகவியின் கவிதையின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தி வந்தவர்கள் இவர்கள்தான்.

மஹாகவி பற்றிச் சண்முகம் சிவலிங்கம் அக்காலத்தில் எழுதிய கட்டுரைதான் கடும் கோட்பாட்டு விமர்சன நிலையைத் தகர்த்தது. இன்றைய வளர்ச்சிப்போக்கில் அக்கட்டுரை கருத்து மாறுபாடுகளுக்கு இடமளிக்கக்கூடியதாவும் இருக்கலாம். இவரது தனித்துவமான கவிதைகளைப் போலவே சிறுகதைகளும் தனித்துவமானது. கேரளாவில் உயர் கல்வி கற்ற காலத்தை பின்னணியாகக் கொண்ட ஒரு நாவல் எழுதியிருப்பதாகவும் அறிந்திருந்தேன். படைப்பின் முழுமைமீது தீராத காதல் கொண்ட படைப்பாளி தன் படைப்புக்களை மீண்டும் மீண்டும் படித்து, மீண்டும் மீண்டும் திருத்தங்கள் செய்தபடியிருக்கும் திருப்தியுறாத மனமுடையவனாகவே இருப்பார். அவ்வாறே அவர் காலத்தை தள்ளிப்போட்டுக்கொண்டு வந்ததையிட்டு அதிருப்தி எனக்கும் பலருக்கும் உண்டு.

சண்முகம் சிவலிங்கம் மேலைத்தேச சிந்தனைகளை அப்படியே வெளியே கொட்டுபவரல்ல. எதையும் தனது ஆழ்ந்த கிரகிப்பிலும் சுய சிந்தனை வெளிச்சக்கிலும் எளிமையாக விளக்கக்கூடியவரே. அதற்கு உதாரணமாக 'அலை'யில் வெளிவந்த 'இருப்பியல்வாதம்' பற்றிய கட்டுரையைக் கொள்ளலாம்

ஒருமுறை தொலைபேசியில் அவருடன் உரையாடியபோது, மிகுந்த உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் உரையாடினார். 'பின்நவீனத்துவம்' பற்றி எழுதப்போவதாகவும் அதுபற்றி வந்த நூல்களை பத்மநாப ஐயரிடம் கேட்டிருப்பதாகவும் கூறினார். சிறிது காலத்தின் பின்னர் மீண்டும் அவருடன் தொலைபேசியில் உரையாடியபோது அந்த உரையாடல் சுமுகமாக இருக்கவில்லை.

இரண்டு கவிதைத் தொகுதிகளுக்குப்பின், அவரது சிறுகதைகளையும் நாவலையும் நூலுருவாக்க பத்மநாப ஐயர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அவரது எழுத்து முயற்சிக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சில ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். ஆனால் அவர் அம்முயற்சி பூரணமாவதற்குரிய பொறுப்புக்களில் ஆர்வமாக இருக்கவில்லை.

அற்ப நிகழ்வும்

அர்த்தம் அற்றதும்

என்னுடன் வருக

எனப் பரபரப்புக்களுக்கும் முக்கியத்துவங்களுக்கும் நடுவில் நசிந்து முகமழிந்து போகும் அற்ப நிகழ்வுகளில் கவனம் குவிக்கும் இக் கலைஞன் 'கானகத்தில் எங்கோ கண்மலரும் ஒரு பூவில்' கவனம் கொண்ட இவர், தனது பணித்துறையில் இருந்து ஓய்வு பெற்றபோதும் படைப்புத் துறையில் இருந்து ஓய்வு பெறாமலே இருந்தார். சிறுகதை, நேர்காணல் ஆகியவைகள் அருந்தலாக வெளிவந்துகொண்டுதான் இருந்தது. பின்னர், அவரது இறுதி ஆண்டுகள் படைப்புத் துறையில் இருந்து ஒய்வு பெற்றவராகவே அறியப்பட்டார். இக்காலங்களில் தனக்கான பொழுதுகளை அவர் கழித்தவிதம் அவருக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்திருக்கலாம், ஆனால் அவரது படைப்புத் திறனை அறிந்தவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கவில்லை.

மனித மனம் எந்த அறிவுசார்ந்த விடயங்களின் வரைவுகளுக்கு ஏற்ப இயங்குவதில்லை. அறிவை மறுதலிக்கும் உணர்வுகள் மனதின் எங்கோ ஒரு புள்ளியில் உயிரோடு உறைந்திருக்கும். அந்த உறைவு அசைகையில் மனிதமனம் எடுக்கும் முடிவுகள் விசித்திரமானவையே. போராட்டக் களத்தில் மகனை இழந்த துயரின் வலி அவரை சதா வாட்டியபடியே இருந்தது. 'பூமிக்கடியில் பொந்து கிண்டி உன்னை என் சிறகுத் தோலுக்குள் போர்த்திய தூக்கணாங்குருவி நான்' என பாடிய அவர், தன் மகனை இழந்து விட்டார் என்ற நிஜத்தை தரிசிக்க வேண்டிவந்தது.

துன்பம் என்னும் சூனியத்துள்

உன் இன்மையும்

உன் இன்மை மூலம்

என் இன்மையும்

இதைத் தவிர வேறென்ன?

என்ற சோகத்தை காலம் ஆற்ற முடியாவிட்டால் சூழலைத் தன் காலுக்குள் போட்டும் மிதிக்கும் நிலை அவருக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கக்கூடும்.

இன்று அவர் இல்லாவிடினும் என்றும் நான் அவரை அழைப்பதைப்போல் அவரை அழைக்கவே விரும்புகிறேன். ஸ்ரிபன் மாஸ்டர்! நீங்கள் பாடியதைப்போல் 'துயர்களை தோசைக் கல்லில் தெறித்துவிட்டு' அமைதியாக உறங்குங்கள். உறங்குவீர்களா?

22-04-2012

Global Tamil News
உலக தமிழ்ச் செய்திகள்

தேடல்
ENGLISH

விசேட செய்திகள் ண்டு இலங்கை தொடர்பான ஜெனிவா யோசனையும் இன்றுள்ள ராஜபக்ஷவும் TNAயை பயன்படுத்தி, ¢
செய்திகள்

» HOME
» SRILANKAN NEWS
» INDIAN NEWS
» DIASPORA NEWS
» WORLD NEWS
» MOUNAMKALLAIKIRATHU

» SPORTS
» ARTICLES
» MUSLIMS
» UPCOUNTRY TAMILS

» AUDIO NEWS
» VIDEO NEWS
» ARCHIVES
» LITERATURE
» WOMEN

இணைப்புக்கள்

ஜீரீஎன் செய்திகள் மொபைலில்
GTBC.fm
Tamilnewscinema.com
Find us on Facebook
follow us on twitter
You Tube

» FORUM
» JOBS
» EVENTS

NEWS ARTICLES

ஈழக்கவிஞர் சண்முகம் சிவலிங்கம் காலமானார்

20 ஏப்ரல் 2012 SHARE

"ஆக்காண்டி, ஆக்காண்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்? கல்லைக் குடைந்து கடலோரம் முட்டை வைத்தேன்.

ஈழத்தின் கிழக்கைச் சேர்ந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம் காலமானார். நேற்றைய தினம் படுத்துறங்கியவர் மரணடைந்தமை காலையிலேயே தெரிய வந்துள்ளது. ஈழத்து நவீன கவிதைகளின் முன்னோடியாகவும் மூத்த கவிஞர்களில் ஒருவராகவும் கவிஞர் சண்முகம் சிவலிங்கம் விளங்கியவர்.

ஈழத்தின் கிழக்கில் கல்முனை பாண்டிருப்பு என்ற கிராமத்தில் 1937 இல் பிறந்தவர் சண்முகம் சிவலிங்கம். விஞ்ஞானப் பட்டதாரியான சிவலிங்கம் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றியவர்.

1960களில் கவிதை எழுதத் தொடங்கிய சண்முகம் சிவலிங்கம் ஈழத்து மக்களின் போராட்டம் மிகுந்த வாழ்க்கை பற்றியும் கிழக்கு ஈழத்தின் வாழ்வியல் மற்றும் இயற்கை அழகு பற்றியும் கவிதைகளை எழுதியுள்ளார்.

1988இல் நீர் வளையங்கள், 2010இல் சிதைந்து போன தேசமும் துர்ந்து போன மனக்குகையும் முதலிய கவிதை நூல்கள் தமிழியல் காலச்சுவடு வெளியாடா வந்தன. கவிதைகளுடன் சிறுகதை, விமர்சனம் முதலிய துறைகளிலும் இவர் ஈடுபட்டார்.

இவருடைய இழப்பு ஈழத்து கவிதையிலும் தமிழ் இலக்கிய உலகிலும் ஈழத் தமிழ் பேசும் சமூகத்திலும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். குளோபல் தமிழ்ச் செய்திகள் கவிஞர் சண்முகம் சிவலிங்கத்திற்கு கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகிறது.

ஆக்காண்டி ஆக்காண்டி

சண்முகம் சிவலிங்கம்

"ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

வைத்ததுவோ ஐஞ்சு முட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சுக் கிரை தேடி
நாலுமலை சுற்றி வந்தேன்.
மூன்று குஞ்சுக் கிரைதேடி

பதிவு செய்ய உள்நுழைய

விசேட செய்திகள் அதிகம்; பிரபல்யமானவை

» யாழ்.அரச அதிபர்இமெல்டா சுகுமார் உடனடி இடமாற்றம் வாசிக்க
» நீ வேண்டுமானால் இதை ஒலிப்பதிவு செய். எனது நேரத்தை வீணாக்காதே - வாசிக்க
» மே 17 இயக்கம்-காலச்சுவடு-கருத்துச் சுதந்திரம் விவாதம் :கருத்துருவாக்க ... வாசிக்க
» தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யவோ மாட்டோம் - சம்பந்தன் வாசிக்க
» யாழ்.குடாநாட்டில் தொடரும் ஆயுதமுனைக் கொள்ளைகள் - தாக்குதல்கள் - மக்கள்... வாசிக்க
» தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இன்று வடக்கு, கிழக்கில் சுதந்திரமாக அரசிய... வாசிக்க
» புலம்பெயர்ந்து வாழும் 5 லட்சம் பேர் வாக்குரிமைகளை இழக்கவுள்ளனர் : வாசிக்க
» சம்பந்தர் காட்டிய கொடியும் அரசு காட்டிய கொடியும்! வாசிக்க
» கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை – பிரேமசந்திரன் வாசிக்க
» ஹிலாரி இந்திய ஆட்சியாளர்களுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக பே... வாசிக்க

1 2 3 4 5

உங்கள் அபிப்பிராயங்கள்

Siva.
11 மே 1202:10(GMT)
"நக்குகிற நாய்க்குச் செக்குத் தெரியுமா?, "

Siva.
11 மே 1201:59(GMT)
"பொருத்தமான காலத்தில் பிரசுரமாகியுள்ள இக்"

Siva.
11 மே 1201:19(GMT)
"கனத்த மனதுடன் கவலையில் இருந்த தமராவுக்கு"

மூவுலகம் சுற்றி வந்தேன்.

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

குஞ்சு பசியோடு
கூட்டில் கிடந்த தென்று
இன்னும் இரைதேடி
ஏழுலகும் சுற்றி வந்தேன்.

கடலை இறைத்துக்
கடல் மடியை முத்தமிட்டேன்.
வயலை உழுது
வயல் மடியை முத்தமிட்டேன்.

கடலிலே கண்டதெல்லாம்
கைக்கு வரவில்லை.
வயலிலே கண்டதெல்லாம்
மடிக்கு வரவில்லை.

கண்ணீர் உகுத்தேன்
கடல் உப்பாய் மாறியதே.
விம்மி அழுதேன்
மலைகள் வெடித்தனவே.

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

வண்டிகள் ஓட்டி
மனிதர்க் குழைத்து வந்தேன்.

கையால் பிடித்துக்
கரைவலையை நானிழுத்தேன்.

கொல்லன் உலையைக்
கொளுத்தி இரும்படித்தேன்.

நெய்யும் தறியிலே
நின்று சமர் செய்தேன்.

சீலை கழுவி
சிகையும் அலங்கரித்தேன்.

வீதி சமைத்தேன்.

விண்வெளியில் செல்லுதற்குப்
பாதை சமைக்கும்
பணியும் பல புரிந்தேன்.

ஆனாலும் குஞ்சுக்கு
அரை வயிறு போதவில்லை.
காதல் உருகக்
கதறி அழுது நின்றேன்.

கதறி அழுகையிலே
கடல் இரத்தம் ஆயினதே.
விம்மி அழுகையிலே

Solomon
10 மே 1223:02(GMT)
"அட இஞ்ச கருத்துக்களத்தில் என்ன நடக்குத"

Siva.
10 மே 1219:38(GMT)
"வாசுதேவ நாணயக்காரவும் தன்னை விலை போன ஒரு"

வீடெல்லாம் பற்றியதே.

கடல் இரத்தம் ஆகுமென்று
கதறி அழவில்லை.
வீடுகள் பற்றுமென்று
விம்மி யழவில்லை.

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

குஞ்சு வளர்ந்ததும்
குடல் சுருங்கி நின்றார்கள்.

பசியைத் தணிக்கப்
பலகதைகள் சொல்லி வந்தேன்.

கடலை இறைத்துக்
களைத்த கதை சொல்லி வந்தேன்.

வயலை உழுது
மடிந்த கதை சொல்லி வந்தேன்.

கொல்லன் உலையும்
கொடுந் தொழிற் சாலையதும்
எல்லா இடமும்
இளைத்த கதை சொல்லி வந்தேன்.

சொல்லி முடிவதற்குள்
துடித்தே எழுந்து விட்டார்.
பொல்லாத கோபங்கள்
பொங்கி வரப் பேசுகின்றார்.

"கடலும் நமதன்னை
கழனியும் நமதன்னை
கொல்லன் உலையும்
கொடுந் தொழிற்சாலையதும்
எல்லாம் நமது" என்றார்
எழுந்து தடி எடுத்தார்
கத்தி எடுத்தார்
கடப்பாரையும் எடுத்தார்
யுத்தம் எனச் சென்றார்
யுகம் மாறும் என்றுரைத்தார்.
எங்கும் புயலும்
எரிமலையும் பொங்கி வரச்
சென்றவரைக் காணேன்.
செத்து மடிந்தாரோ?

வைத்ததுவோ ஐஞ்சு முட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சும் போர் புரிய
நடந்து விட்டார் என்ன செய்வேன்
ஆன வரைக்கும்
அந்த மலைக் கப்பாலே
போனவரைக் காணேன்.
போனவரைக் காண்கிலனே.

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

ஈழத்துக் கவிஞர் சண்முகம் சிவலிங்கம் காலமானார்

Started by அபராஜிதன் , Apr 20 2012 11:02 AM

அபராஜிதன்

Posted 20 April 2012 - 11:02 AM

/images/t/Art/Sha-Siva.jpgஈழத்தின் மிகமுக்கிய கவிஞரும், விமர்சகரும், சிறுகதையாளருமான சண்முகம் சிவலிங்கம் இன்று [20-04-2012 வெள்ளிக்கிழமை] அதிகாலை காலமானார்.

இரவு படுக்கைக்குச் சென்றவர் காலையில் எழும்பவில்லை; மாரடைப்பு காரணமாக நித்திரையிலேயே அவர் இறந்துவிட்டார் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கல்முனை நகருக்கு அருகே உள்ள பாண்டிருப்பில் 1939ம் ஆண்டில் பிறந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம், இந்தியாவின் கேரள மாநிலத்தில் உயர்கல்வி பயின்று அறிவியல் துறையில் பட்டம்பெற்றவராவர். அறிவியல் துறை ஆசிரியராக பணியில் இணைந்து பின்னர் பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார்.

1960ம் ஆண்டுமுதல் கவிதை எழுதிவரும் இவரது கவிதைகள் 'நீர்வளையங்கள்' [தமிழியல் 1988], 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' [காலச்சுவடு 2010] என்ற சிறந்த இரண்டு கவிதை நூல்களாக இதுவரை வெளிவந்துள்ளன.

மார்க்சிய அழகியல் ரீதியில் அமைந்த விமர்சனக் கட்டுரைகளும், அழகிய சிறுகதைகள் பலவும், கையெழுத்துப் பிரதியிலுள்ள இரண்டு நாவல்களும் கவிதைகளும் நூல்வடிவம் பெறவேண்டிய நிலையில் உள்ளன.

இவரது ஒரு மகன் ஈழப்பேராட்டத்தில் களப்பலியானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது மறைவு ஈழத் தமிழ் இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும்.

http://www.puthinapp...?20120420106036 (http://www.puthinappalakai.com/view.php?20120420106036)

தப்பிலி

Posted 20 April 2012 - 11:38 AM

ஆழ்ந்த அனுதாபங்கள்.
ஸ்டீபன் ஐயாவின் குடும்பத்திற்கு எனது துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரதி

Posted 20 April 2012 - 11:46 AM

மாஸ்டர் சிவலிங்கம் என்பவர் இவரா?...பாடசாலைகளுக்கெல்லாம் வந்து கதை எல்லாம் சொல்லுவாரே...ஆழ்ந்த அனுதாபங்கள்...ஆத்மா சாந்தி அடையட்டும்

அபராஜிதன்

Posted 20 April 2012 - 11:47 AM

ஆழ்ந்த அனுதாபங்கள்..!

புங்கையூரன்

Posted 20 April 2012 - 11:50 AM

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு, ஆழ்ந்த அனுதாபங்கள்!

இசைக்கலைஞன்

Posted 20 April 2012 - 11:51 AM

ஆழ்ந்த இரங்கல்கள்..!

தப்பிலி

Posted 20 April 2012 - 11:54 AM

> *ரதி, on 20 April 2012 - 11:46 AM, said:*
>
> மாஸ்டர் சிவலிங்கம் என்பவர் இவரா?...பாடசாலைகளுக்கெல்லாம் வந்து கதை எல்லாம் சொல்லுவாரே...ஆழ்ந்த அனுதாபங்கள்...ஆத்மா சாந்தி அடையட்டும்

பத்திரிகைகளில் கதைகள் எழுதியிருக்கலாம். சரியாக ஞாபகம் இல்லை.
ஸ்டீபன் சேர் (சண்முகம் சிவலிங்கம்) கவிஞர். விலங்கியல் பாடம் கற்பிப்பவர்.

தப்பிலி

Posted 20 April 2012 - 12:03 PM

சர்வதேச ஜோக்கர்கள்

வட கிழக்கில் மையம் கொள்கிறார்,
சர்வதேச ஜோக்கர்கள்
கையைக் குத்தி காலை உயர்த்தி
கரணம் அடிக்கிறார் ஜோக்கர்கள்
தலையில் கவிழ்ந்த
குஞ்ச வால் தொப்பி சரிய
முகம் நிறைய பவுடர் பூச்சு
அமெரிக்கப் பூச்சு
கனேடியப் பூச்சு
நெதர்லாந்துப் பூச்சு
மூக்கு நுனியில்
பிரித்தானியக் கரியைப் பூசி
துருவக்கரடியின் மோப்பம் காட்டி
வட கிழக்கில் மையம் கொள்கிறார்
சரவதேச ஜோக்கர்கள்,
நாடி பிடித்து நடிக்கும் ஜோக்கர்கள்
ஓம்,ஓம் போடும் ஊமை ஜோக்கர்கள்
குஞ்ச வால் தொப்பியினுள்
குதிரை இருப்பதாய்
நம்ப வைக்கும் நமட்டு ஜோக்கர்கள்
சுக்குத் தண்ணீரில்
சுயநிர்ணய உரிமையைக்

கரைத்துக் குடித்துக்
காலைக் கிளப்பி ஈழத்தின் எல்லைக்
கல்லை நனைக்கும் நாலு கால் ஜோக்கர்கள்
மாகாண சபையை மயிருக்குள் வைத்து
சமஷ்டியை சந்துக்குள் நுழைத்து
காணோம் காணோம் எனக்
கையை விரிக்கும்
ஜோக்கர்கள், ஜோக்கர்கள்
வட கிழக்கில் மையம் கொள்ளும்
சர்வதேச ஜோக்கர்கள்
பராக், பராக்.

- சண்முகம் சிவலிங்கம் (2001) -

தமிழரசு

Posted 20 April 2012 - 12:08 PM

ஆழ்ந்த இரங்கல்கள்..!

நிழலி

Posted 20 April 2012 - 03:06 PM

மிகவும் கவலையான செய்தி...அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலிகள்.

அபராஜிதன்

Posted 20 April 2012 - 04:24 PM

ஈழத்தின் மிகமுக்கிய கவிஞரான சண்முகம் சிவலிங்கத்தை இழந்து விட்டோம். 1960 களில் எழுதத் தொடங்கியதில் இருந்து தன்னுடைய இறுதிக் கவிதை வரையில் ஈர்ப்புக் குன்றாமல், புதுமை குன்றாமல் எழுதி வந்தவர் சசி.

1939ம் ஆண்டில் பிறந்த சண்முகம் சிவலிங்கம் 1960 களில் எழுதத் தொடங்கியவர். 2012 வரையில் எழுதியவர்.

இதுவரையில் 'நீர்வளையங்கள்' [தமிழியல் 1988], 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' [காலச்சுவடு 2010] என்ற இரண்டு கவிதை நூல்களாக இதுவரை வெளிவந்துள்ளன.

ஆனால், சண்முகம் சிவலிங்கம் எழுதிய சிறுகதைகள் எவையும் இன்னும் தொகுக்கப்படவில்லை. அவர் ஒரு நாவலை எழுதி வைத்திருந்ததாகவும் கேள்வி.

இதைவிட, விமர்சனங்களையும் எழுதி வந்தார்.

இலங்கையின் கிழக்கே கல்முனை நகருக்கு அருகே உள்ள பாண்டிருப்பில் கவிஞர் சண்முகம் சிவலிங்கம், இந்தியாவின் கேரள மாநிலத்தில் உயர்கல்வி பயின்று அறிவியல் துறையில் பட்டம்பெற்றவர். அறிவியல் துறை ஆசிரியராக பணியில் இணைந்து பின்னர் பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார்.

இரவு படுக்கைக்குச் சென்றவர் இன்று [20-04-2012 வெள்ளிக்கிழமை]
காலையில் எழும்பவில்லை; மாரடைப்பு காரணமாக நித்திரையிலேயே அவர் இறந்துவிட்டார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கவிதைக்குப் புதிய பரிமாணங்களைத் தந்து தனித்த அடையாளமாகத் துலங்கிய சண்முகம் சிவலிங்கத்தின் இழப்புப் பெரிதே.

via Sivarasa Karunagaran (முகநூல்ஊடாக)

தமிழ் சிறி

Posted 20 April 2012 - 04:40 PM

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் ஐயாவுக்கு கண்ணீர் அஞ்சலிகள்.
அன்னாரின், பிரிவால் துயருறும்... உற்றார், உறவினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

கிளியவன்

Posted 20 April 2012 - 04:47 PM

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் ஐயா அவர்களுக்கு எனது கண்ணீர் அஞ்சலிகள்.

கிருபன்

Posted 20 April 2012 - 06:45 PM

அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்கள்..

தப்பிலி

Posted 20 April 2012 - 06:53 PM

போருக்குப் போனாய், போ

போனாய் நீ

போருக்குப் போனாய்,
போ.
ஓநாய்களுக்குப் பயந்து
உன்னை
வாயில் கவ்வி வழி தேடிய
பூனை நான்
போனாய் நீ
போருக்குப் போனாய்,
போ.
வானில்,
பனையின் வைர ஓலைகளில்
கூடுகள் நெய்தால்
குண்டர் உன்னைக் கொல்வார் என
பூமிக்கடியில் பொந்து கிண்டி
உன்னை
என் சிறகு
தோலுக்குள் போர்த்திய
தூக்கணாங் குருவி நான்

என் துணையையும் மீறி
போனாய் நீ
போருக்குப் போனாய்,
போ.
(1986)

http://www.umavarath...sivalingam.html
(http://www.umavaratharajan.com/virunthinar%20koodam/sanmuham%20sivalingam.html)

---

akootha

Posted 20 April 2012 - 07:23 PM

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

Edited by akootha, 20 April 2012 - 10:31 PM.

கறுப்பி

Posted 20 April 2012 - 08:09 PM

ஆழ்ந்த அனுதாபங்கள்..!

வல்வை சகாறா

Posted 20 April 2012 - 08:18 PM

அன்னாரின் இழப்பால் தவிக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்

விசுகு

Posted 20 April 2012 - 08:24 PM

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் ஐயாவுக்கு கண்ணீர் அஞ்சலிகள்.
அன்னாரின், பிரிவால் துயருறும்... உற்றார், உறவினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்கள்

குமாரசாமி

Posted 20 April 2012 - 08:37 PM

ஆழ்ந்த அனுதாபங்கள்.

கருத்துக்களம் → செம்பாலை [செய்திக்களம்] → ஊர்ப் புதினம்

யாழ் இணைய கருத்துக்களத்தில் எழுதப்படும் கருத்துக்கள், இணைக்கப்படும் ஆக்கங்கள், கட்டுரைகள் அல்லது செய்திகள் ஆகியவை கருத்துக்கள உறுப்பினர்களால் இணைக்கப்படுவன. எனவே, அவற்றுக்கு யாழ் இணையம் பொறுப்பல்ல + பொறுப்பேற்காது. அதே போன்று - இங்கு எழுதப்படும் கருத்துகள் அல்லது வெளிப்படுத்தப்படும் எண்ணங்கள் அதை எழுதும் எழுத்தாளரினுடையதே/உறுப்பினருடையதே - அன்றி - யாழ் இணைய நிர்வாகத்தினது அல்ல. எனவே - எழுதப்படும் கருத்துகளின்/ஆக்கங்களின்/கட்டுரைகளின்/செய்திகளின் உண்மைத்தன்மைக்கும், முழுமைத்தன்மைக்கும் யாழ் இணையம் (நிர்வாகம்) உறுதி அளிக்காது. இக் கருத்துக்களம் உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மட்டுறுத்துனர் குழுவால் கருத்துக்கள விதிமுறைகளின் அடிப்படையில் மட்டுறுத்தப்படுகிறது. யாழ் இணையத்தில் காப்புரிமை மீறல் ஏதும் இடம்பெற்றிருந்தால், யாழ் இணைய நிர்வாகத்தினருக்கு நீங்கள் அறியத்தரலாம். நாம் அது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுப்போம். [கருத்துக்கள விதிமுறைகள்]

Traffic Rank
yarl.com
84,829
Powered by Alexa

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் – கிளர்த்தும் நினைவுகள்

Friday, 20 April 2012 21:40 - சு. குணேஸ்வரன் (துவாரகன்)

- இலக்கியம்

ஈழத்தின் முக்கிய கவிஞர்களில் ஒருவராகிய சண்முகம் சிவலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி நந்தினிசேவியர் ஐயா மூலம் இன்று (20-04-2012) பகல் அறியநேர்ந்தது. சண்முகம் சிவலிங்கம் என்றாலே 'ஆக்காண்டிப் பாடல்'தான் ஞாபகம் வரும். 'ஆக்காண்டி' என்ற நாட்டார் பாடலில் தனது குஞ்சுகளை ஒவ்வொன்றாக இழந்த தாய்ப்பறவையின் சோகம் காற்றில் இழைந்து வருவதை எல்லோரும் அறிவர். அதே ஆக்காண்டிப் பாடலை அடிப்படையாக வைத்து சண்முகம் சிவலிங்கம் எழுதிய பாடலும் எங்கள் வாழ்க்கையைப் பாடும் பாடலாக அமைந்திருந்தது. 1988 இல் வெளிவந்த "நீர்வளையங்கள்" என்ற தொகுப்பினூடாக இலக்கிய உலகில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டார். அதன்பிறகு 2010 இல் தான் அவருடை ய இரண்டாவது தொகுதியான "சிதைந்துபோன தேசமும் தூர்ந்து போன மனக்குகையும்" வெளிவந்தது. இந்த இரண்டாவது தொகுப்பு ஒரு காவியம்போலவே தொகுக்கப்பட்டுள்ளதை படிப்பவர் உணர்வர். அண்மைக்காலங்களில் அவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை. விமர்சனத்தின் புதிய போக்குகளை அவை இனங்காட்டத்தக்கவை. கவிதைகளோடு சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு, விமர்சனம் ஆகிவற்றிலும் தன் ஆளுமையைச் செலுத்திவந்துள்ளார். ஆனால் கவிதையே அவரை ஒரு அழியாக் கவிஞனாக நிலைநிறுத்தியுள்ளளது.

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் பற்றி மூன்று ஞாபகங்கள் என்னிடம் உள்ளன.

அன்னாரை ஒரே ஒருமுறைதான் நேரில் காணக்கிடைத்தது. அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'தூண்டி' என்ற இலக்கிய இதழ் 2003 இல் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் 3 நாள் ஆய்வரங்கை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கவிதை தொடர்பான அரங்கில் சண்முகம் சிவலிங்கம் வ.ஐ.ச ஜெயபாலன், ஒட்டமாவடி அறபாத், மு. பொ ஆகியோரின் கவிதைகள் பற்றி உரையாற்றினார். அவரை நேரில் கண்டிருக்கிறேன். ஆனால் உரை கேட்கக் கிடைக்கவில்லை.

மற்றும் ஒரு சந்தர்ப்பம் நான் அப்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தபோது (1999 ற்கு முன்னர்) "நாட்டார் இசைமாலை" என்ற நிகழ்வினை யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தினூடாக பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் வழிகாட்டலில் நண்பர்களுடன் பயின்று அதனை பல இடங்களில் நிகழ்த்தினோம். முக்கியமாக ஆக்காண்டிப்பாடல், பண்டிப்பள்ளுப்பாடல், முசுறுப்பாடல், தாலாட்டு முதல் வேடிக்கைப்பாடல் வரையான பலவகையான நாட்டார்பாடல்கள் அங்கு நிகழ்த்தப்பட்டன. ஆனால் ஆக்காண்டிப்பாடலை தனிக்குரலில் தற்போது யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கும் நண்பி சுகன்யா தனியாக முதலில் பாட; நாங்கள்

கோரஷாக பாடுவோம். அப்போது அந்தப் பாடலில் இழைந்து வரும் சோகம் வார்த்தைகளால் சொல்லமுடியாது. அந்த நேரங்களில் எல்லாம் சண்முகம் சிவலிங்கம் எழுதிய ஆக்காண்டிப்பாடல் பற்றியும் அறிந்திருந்தோம். அதன்பிறகு நான் பணியாற்றிய பாடசாலைகளில் வரும் கலை நிகழ்வுகளில் அந்தப்பாடலை மாணவர்களுக்கு பழக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் தவறாமல் கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் பெயரும் எப்படியோ வந்துவிடும்.

இன்னொரு சந்தர்ப்பம் 2008 இல் எனது “மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள் “ தொகுப்பு வெளிவரமுன்னர் அ.யேசுராசா அவர்களிடம் கவிதைகளில் இருக்கும் முரண்கள், தவறுகள், திருத்தங்கள் தொடர்பாக பேசிக்கொண்டிருந்தபோது "முதுகுமுறிய பொதி சுமக்கும் ஒட்டகங்கள்" என்ற எனது கவிதையை சிலாகித்து சண்முகம் சிவலிங்கத்தின் கவிதை ஒன்றுடன் தொடர்புபடுத்தி உரையாடினார். அது எனக்கும் உற்சாகத்தைத் தருவதாக அமைந்திருந்தது. பல்கலைக்கழகத்தில் கற்கைநெறிக்காக நாங்கள் கவிதைகளை அறிந்து கொண்ட சந்தர்ப்பங்கள்; மேலும் ஈடுபாட்டோடு பல கவிஞர்களைத் தேடிப்படிக்க வைத்தன. அப்போது மீண்டும் மீண்டும் வாசிக்கவேண்டியவராக சண்முகம் சிவலிங்கம் எங்கள் முன் இருந்தார்.

இந்த மூன்று ஞாபகங்களும் தவிர்க்கமுடியாமல் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் மறைவின்போது முன்னால் வந்துவிடுகின்றன. ஈழத்துக் கவிதை வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஆளுமையாக என்றும் நிலைத்திருக்கும் பெருமைக்குரியவர் கவிஞர் சண்முகம் சிவலிங்கம். அன்னாருக்கு எங்கள் அஞ்சலிகள்

நான் மேலே குறிப்பிட்ட இரண்டு கவிதைகளையும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்

1.

இன்று இல்லெங்கிலும் நாளை

-சண்முகம் சிவலிங்கம் -

எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன.
எங்கள் இமைகள் கவிந்துள்ளன.
எங்கள் உதடுகள் அண்டியுள்ளன.
எங்கள் பற்களும் கண்டிப்போய் உள்ளன.
நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்.

எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக.
எங்களை நீங்கள் வண்டியில் பூட்டுக.
எங்கள் முதுகில் கசையால் அடிக்குக.
எங்கள் முதுகுத்தோல் பிய்ந்துரிந்து போகட்டும்
தாழ்ந்த புருவங்கள் ஓர்நாள் நிமிரும்
கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்.
இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்.
கண்டிய பற்கள் ஒருநாள் நறநறக்கும்.

அதுவரை நீங்கள் எங்களை ஆள்க.
அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக.

2.

ஆக்காண்டி ஆக்காண்டி

-சண்முகம் சிவலிங்கம் -

”ஆக்காண்டி, ஆக்காண்டி

எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

வைத்ததுவோ ஐஞ்சு முட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சுக் கிரை தேடி
நாலுமலை சுற்றி வந்தேன்.
மூன்று குஞ்சுக் கிரைதேடி
மூவுலகம் சுற்றி வந்தேன்.

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

குஞ்சு பசியோடு
கூட்டில் கிடந்த தென்று
இன்னும் இரைதேடி
ஏழுலகும் சுற்றி வந்தேன்.

கடலை இறைத்துக்
கடல் மடியை முத்தமிட்டேன்.
வயலை உழுது
வயல் மடியை முத்தமிட்டேன்.

கடலிலே கண்டதெல்லாம்
கைக்கு வரவில்லை.
வயலிலே கண்டதெல்லாம்
மடிக்கு வரவில்லை.

கண்ணீர் உகுத்தேன்
கடல் உப்பாய் மாறியதே.
விம்மி அழுதேன்
மலைகள் வெடித்தனவே.

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

வண்டிகள் ஓட்டி
மனிதர்க் குழைத்து வந்தேன்.

கையால் பிடித்துக்
கரைவலையை நானிழுத்தேன்.

கொல்லன் உலையைக்
கொளுத்தி இரும்படித்தேன்.

நெய்யும் தறியிலே
நின்று சமர் செய்தேன்.

சீலை கழுவி
சிகையும் அலங்கரித்தேன்.

வீதி சமைத்தேன்.

விண்வெளியில் செல்லுதற்குப்
பாதை சமைக்கும்
பணியும் பல புரிந்தேன்.

ஆனாலும் குஞ்சுக்கு
அரை வயிறு போதவில்லை.
காதல் உருகக்
கதறி அழுது நின்றேன்.

கதறி அழுகையிலே
கடல் இரத்தம் ஆயினதே.
விம்மி அழுகையிலே
வீடெல்லாம் பற்றியதே.

கடல் இரத்தம் ஆகுமென்று
கதறி அழவில்லை.
வீடுகள் பற்றுமென்று
விம்மி யழவில்லை.

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

குஞ்சு வளர்ந்ததும்
குடல் சுருங்கி நின்றார்கள்.

பசியைத் தணிக்கப்
பலகதைகள் சொல்லி வந்தேன்.

கடலை இறைத்துக்
களைத்த கதை சொல்லி வந்தேன்.

வயலை உழுது
மடிந்த கதை சொல்லி வந்தேன்.

கொல்லன் உலையும்
கொடுந் தொழிற் சாலையதும்
எல்லா இடமும்
இளைத்த கதை சொல்லி வந்தேன்.

சொல்லி முடிவதற்குள்
துடித்தே எழுந்து விட்டார்.
பொல்லாத கோபங்கள்
பொங்கி வரப் பேசுகின்றார்.

"கடலும் நமதன்னை
கழனியும் நமதன்னை
கொல்லன் உலையும்
கொடுந் தொழிற்சாலையதும்
எல்லாம் நமது" என்றார்
எழுந்து தடி எடுத்தார்
கத்தி எடுத்தார்
கடப்பாரையும் எடுத்தார்
யுத்தம் எனச் சென்றார்
யுகம் மாறும் என்றுரைத்தார்.
எங்கும் புயலும்

எரிமலையும் பொங்கி வரச்
சென்றவரைக் காணேன்.
செத்து மடிந்தாரோ?

வைத்ததுவோ ஐஞ்சு முட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சும் போர் புரிய
நடந்து விட்டார் என்ன செய்வேன்
ஆன வரைக்கும்
அந்த மலைக் கப்பாலே
போனவரைக் காணேன்.
போனவரைக் காண்கிலனே.

ஆக்காண்டி, ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்?
கல்லைக் குடைந்து
கடலோரம் முட்டை வைத்தேன்.

……..

01

சண்முகம் சிவலிங்கம் என்ற பெயரை நான் முதன்முதலாகக் கேள்விப்பட்டது எச். எம். பாறூக்கிடமிருந்துதான். 1988 என்று நினைக்கிறேன். கல்முனை ஸாஹிறாக் கல்லூரி வெளிக்கேற்றடியில் நான் அவருடன் உரையாடிய முதல்நாள் அவர் என்னை வாசிக்கும்படி சொன்னது 'நீர் வளையங்கள்' தொகுப்பைத்தான். அந்த நாட்களில் மிகக்கடுமையான இலக்கிய விமர்சனங்களை முன்வைப்பவராகவும் பரிசோதனைக் கவிதைகளை எழுதுபவராகவும்எச். எம். பாறூக் பிரபலமாகியிருந்தார். அப்போது வெளிவந்த 'இருப்பு' சஞ்சிகையின் ஆசிரியர்களுள் ஒருவர் அவர். ஸாஹிறாவில் கற்பித்துக் கொண்டிருந்தார்.

அதற்கடுத்த வாரம் கவிஞர் சோலைக்கிளியுடன் அறிமுகமேற்பட்டது. சோலைக்கிளி எனக்கு இரண்டு நூல்களை நட்புடன் அன்பளிப்பாகத் தந்தார். அதில் ஒன்று சண்முகம் சிவலிங்கத்தின் 'நீர் வளையங்கள்' தொகுப்பு. நவீன கவிதைபற்றியும் சிவலிங்கத்தின் கவிதைகள் பற்றியும் எச்.எம் பாறூக் சொன்னவற்றில் கிறுகிறுத்துப் போயிருந்த எனக்கு அந்தக் கவிதைத் தொகுப்பு கையில் கிடைத்ததில் நிலத்தில் கால் தாவவில்லை. கல்லூரி விடுதிக்கு எப்படிப் போனேனென்றே தெரியாது. அந்த நாளோடு எனது கவிதை, எனது கலை, இலக்கியப் பார்வை, எனது சாயலும் கூட அடியோடு மாறிப்போகுமென்று நான் நினைத்திருக்கவில்லை.

'……

Chromosomes Good bye

Mutations Farewell

எங்கள் சாயலை நாங்களே இணக்கினோம்
புருவப் பிறைமேல் கூர்ங்கோண நெற்றி
நெற்றியில் நீவிய தலைமயிர்க்கற்றைகள்
கற்றைகள் தொங்கும் கழுத்தும் பிடரியும்
நாங்களே எங்கள் சாயலை நடத்தினோம்,

Chromosomes Good bye

Mutations Farewell
……' (நீர் வளையங்கள்: பக்-106)
என்ற ச.சியின் 'சுயவார்ப்புகள்' கவிதை வரிகள் எனக்காகவே எழுதப்பட்டவை போன்றிருந்தன.

2.

1990. யுத்தம் அதன் இன்னொரு அகோர முகத்தை வெளிக்காட்டிக்கொண்டிருந்த காலம். நான் மாலை நேர வகுப்புக்களுக்கு சாய்ந்தமருதிலிருந்து கல்முனை நகருக்கு சைக்கிளில் சென்று திரும்புவேன். வருகின்ற போது நெடுஞ்சாலையின் வலது பக்கமாக முடிவற்றுப் பரந்திருக்கும் வயல்வெளிகளில் சூரியன் விழுந்து கொண்டிருப்பதையும் நடுவால் போகும் மின் கம்பிகளையும் கீழே மேயும் மாடுகளையும் பார்த்து உயிரை விட்டுக்கொண்டு போவேன். இதைத்தான் சண்முகம் சிவலிங்கம் தன் நண்பரோடு ஊர்சுற்றி வரும்போது

‘……..
கண்படுவரை நீள்கரவாகு வட்டை என்றேன்
அங்கே அடிவானம் அண்டுதுபார் என்று சொன்னாய்
……’ (நீர் வளையங்கள்: பக்-84)

என எழுதியிருப்பார் என நினைப்பேன். பரவளைவக்கோடு, நாங்கள் இரு தும்பிகள் கவிதைகளெல்லாம் இப்படி சைக்கிள் சவாரிகளில் மனத்திரையில் ஓடிக்கொண்டிருக்கும். ச.சியுடன் சைக்கிளோடிய நண்பர் நுஃமான் சேரோ என்று நினைப்பேன். பரவளைவுக்கோட்டில் அநசசல-பழ-சழரனெ அருகே சிவத்தக் கமிசணிந்து தோள் தெரிய நெஞ்சைச் சுமந்த ஒருத்தியைப் பற்றிய உரையாடல் வரும்போது அது நுஃமான் சேராக இருக்காது என்று குழம்புவேன். ச.சியுடன் சைக்கிளோடுவது தனித்தனியாக இருவேறு நண்பர்கள் என பிறகு நானே எனக்குள் தற்காலிகமாகச் சமாதானமடைந்தேன். 93இன் பின்னர் சைக்கிளில் ஊர், வயல், வெளி, ஆறு, காடுமேடென்று அக்கறைப்பற்றில் ரஷ்மியுடன் சுற்றித்திரிந்த பொழுதுகளிலெல்லாம் ‘நாங்கள் இரு தும்பிகள்’ கவிதை அந்த ஊரின் இதமான காற்றோடு மனதுக்குள் கதகதத்தது.

‘……
நாங்கள் இருதும்பிகள் பாடிவந்தோம்
நாங்கள் இருபறவைகள் பறந்துசென்றோம்
எங்கும் திரிந்தோம்-புல்-வெளி-மலை-அருவி-ஆறு
எங்கும் பறந்தோம்-கிறவல்-மணல்-கடல்-காற்று.
……..’ (நீர் வளையங்கள்: பக்-11)



அக்கறைப்பற்றில் ஒரு வீட்டின் மொட்டைமாடியின் பெல்கனியில் நாங்கள் உறங்கிய காலத்தில் நடுச்சாமம் சிறுநீர் கழிக்க இறங்கி வந்து பற்றையருகே குந்தி நிமிர்ந்து பார்த்தால் பிரகாசமான நீலவானம் தெரியும், ‘வெளியார் வருகை’ கவிதையில் போல

‘……
மூத்திரம் பெய்ய இடையில் முழித்தெழுந்தேன்
வார்த்தடியை நீக்கிக் கதவைத் திறக்க-
இருள் போர்த்தித் தெரிந்தது
கோடிக்குள் போகையிலே
வானத்தை அண்ணார்ந்து பார்த்தேன்
வடிவாக வெள்ளிகள் பூத்து மினுங்கின
மூத்திரம் பெய்யும் பொழுது
பிறகும் ஒருமுறை

அண்ணார்ந்து பார்த்தேன்-அடடா
-ஓ அடடா!' (நீர் வளையங்கள்: பக்-92)

என்றிருக்கும். கவிதையில் தொடர்வது போல் 'வானத்திலிருந்து வெள்ளிகள் கீழ் இறங்குவது போன்று தெரியும், வெளியில் வருவதற்கு இருட்டில் கதவிற்குக் குறுக்காகப் போட்டிருக்கும் வார்த்தடியை நீக்கும் போதும் அந்தக்கவிதை நினைவு வரும், அதையும் எழுதியிருக்கிறார் என்று நினைப்பேன். கிணற்றடியில் போய்க் குந்தும் நாட்களில்

'.....
அதோ இந்த நிலவில்
அகன்ற இலை வாழையிலே பனி சொட்டும் கீதம்
"இச்"
என்ற ஒலியுடனே எழுகிறது மீண்டும்
....' (நீர் வளையங்கள்: பக்-26)

என்ற வரிகள் மனதுக்குள் நிழலாடும். அந்தக் காலத்தில் வந்த நிலாநாட்களெல்லாம் ச.சியுடையனவாகவே இருந்தன. நித்திரை சீரழியும் இரவுகளில் பனிக்குப் பயந்து தலையைச் சேர்த்துச் சாறனை இழுத்துப் போர்த்துக் கொண்டு, யாரென்று தெரியாத, அவ்வப்போது மனதில் தோன்றி உள்ளுக்குள் குளிர் மின்னல் பாய்ச்சும் பெண்ணொருத்தியை நினைத்து அவரது தொகுப்பிலுள்ள நீர் வளையங்கள் என்ற தலைப்பிலமைந்த கவிதையைச் சினமாப் பாடல் போல முணுமுணுத்தபடி தவ நிலையில் உட்கார்ந்திருப்பேன்.

'.....
இன்று மிகத் துயர் உற்றேன்
என் இனிய அன்பே,
இவ்விரவின் நிலவொளியில் என்னுடன் நீ இருந்தால்
வெண்பனியின் துளி சொட்டும்,
பூங்கொத்தைப் போன்று விம்முகிற என் நெஞ்சில்
ஆறுதல்கள் தருவாய்...
..... '(நீர் வளையங்கள்: பக்-23,24)

என்று அவரெழுதும் போது ஆரையம்பதியில் நான் களவாக போகன்விலாக் கந்துகள் உடைத்த பூமரங்களெல்லாம் திரும்பிப் பார்க்கும் போது ஆடியது ஞாபகம் வரும். விம்முவதை இதைவிட சிறப்பாகக் காட்சிப்படுத்த முடியுமா என்று யோசிப்பேன். அப்படியொரு உயிரோட்டமான படிமமாக அது தெரிந்தது.

அது போல 'வாழ்வும் மரணமும்' கவிதையில் வரும்

'.....
கோயில் அரசமரம் முன்னால் தெரிந்தது
எல்லா இலையும்
உதிர்ந்த கிளைகளின் பின்னால்,
நரைத்த பெரிய நிலாப்பந்து
....' (நீர் வளையங்கள்: பக்-18)

வரிகளின் பாதிப்பில் இன்றும் கூட இலையுதிர்த்த எந்த மரத்திற்கும் பின்னால் எனக்கு வெள்ளைவெளீரென்ற ஒரு முழுநிலாத் தேவைப்படுகிறது.

நிலவும் வழிப்போக்கனும் கவிதையைப் படித்து விட்டு 'என்ன மாதிரி யோசித்திருக்கிறார்' என்று வியந்திருக்கிறேன். ஒருவர் நடக்கும் போது நிலவும் அவரோடு நடப்பது போன்ற பிரமையனுபவம் எவருக்கும் சாதாரணமாகத் தோன்றக் கூடியது. ச.சிக்கு நிலவிடம் கேள்விகள் இருந்தன.

;.....
உனது
வெள்ளி ஓர விளிம்பின்
இமைப்புக்குள்
இந்தச்
சின்ன மனிதன் தெரிகிறானா?
நீ இந்த வழிப்போக்கனைக் காண்கிறாயா?
....' (நீர் வளையங்கள்: பக்-45)
என்கிறார். இத்தகைய தத்துவார்த்தம் மிகுந்த கற்பனைகள் அவரை ஏனைய கவிஞர்களிலிருந்து வேறுபடுத்துகின்றன.

(தொடரும்)

en.aathmaa@gmail.com

Share this: Email Print Facebook Tweet 0 0

By admin in அஞ்சலி, ஆளுமை, என்.ஆத்மா on May 3, 2012

தகவல்

Saturday, April 21

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் - அஞ்சலிக் குறிப்புகள்

1. போய்வாரும் தோழரே -
நந்தினி சேவியர்

"இருந்தாலும் அவர் என் இதயத்துக்கு மிகவும் நெருக்கமானவர். என்பதைச் சொல்லியாக வேண்டும். பழைய மார்க்சீய, லெனினிய மா-ஓ-வோ சித்தாந்தவாதிகளுக்குமிடையே உள்ள பாசம் இன்னும் எங்களுக்கிடையே இருக்கிறது. எல்லோரையும்விட நான் ஒரு கம்யூனிஸ்டை ஒரு கம்யூனிஸ்ட் அனுதாபியை அதிகம் நேசிப்பேன். எல்லாவற்றையும் எல்லா வகையிலும் இழந்து சோர்ந்துபோன எனக்கு, இன்று பற்றுக்கோடாக இருப்பது பழைய தோழர்களின் பாசம்தான். அன்புடீனுக்கு புதிய சித்தாந்தங்கள் ஏதாவது இருந்தாலும் ஒரு பழைய தோழராகவே நான் அவரைப் பார்க்கிறேன். ஏன் பழைய தோழர் என்கிறேன்? எல்லாமே பொய்யாய், கனவாய், பழங்கதையாய் மெல்ல போயிற்றே அதனால்"

மேற்குறித்த சசியின் வாக்குமூலம் அன்புடீனின் நெருப்புவாசல் சிறுகதைத் தொகுதிக்கு 'விலகல்' என்னும் தலைப்பில் எழுதிய முன்னுரையில் நான்காவது பந்தியாக அமைந்துள்ளது.

ஏதோ ஒரு வகையில் எனக்கு உடன்பாடானவரான சசியின் 'விலகல்' முன்னுரையின் மேற்போந்த கூற்று என்னை ஒருகணம் திணறடித்தது உண்மை. எனக்கும் இன்று பற்றுக்கோடாக இருப்பது தோழர்களின் பாசம்தான்.

பழைய தோழமையை பசுமை மாறாமல் பேணும் அவரது படைப்புகளை மீளவும் மீளவும் நான் நினைவு கூருவேன். சமீப நாட்களாக எனது உரையாடல்களில் சண்முகம் சிவலிங்கம் அடிக்கடி வந்து கொண்டிருந்தார்.

அவரது 'வெளியார் வருகை' 'ஆக்காண்டி' முதலிய கவிதைகளும், 'நீர்வளையங்கள்' கவிதைத்தொகுதியும், தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டில் அதிர்ச்சியூட்டிய அவரது கவிதையும் நண்பர்களோடு அடிக்கடி பகிரப்பட்டுக் கொண்டிருந்தன.

எனது 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' தொகுதியை அவருக்கு வழங்கவென நண்பர் வி. கௌரிபாலனுடன் பாண்டிருப்புக்குச் சென்றும் அது சாத்தியமாகவில்லை. உமா வரதராஜன் மூலம் அதனை அவரிடம் சேர்ப்பித்தேன். தனது இறுதிச்சந்திப்பு எனது தொகுதியை அவரிடம் சேர்ப்பித்தபோதே நிகழ்ந்ததாக உமா என்னிடம் கூறினார்.

சசித்தோழரே நாம் இருவரும் நெருங்கிப் பழகவில்லைத்தான். ஆயினும் உம்மீதான எனது பிரியம் உமது இலக்கிய அரசியல் நோக்குக் காரணமானது. உமது கதைகளை, குறுநாவல்களை, கவிதைத்தொகுப்புகளை வாசிக்கத் தூண்டுதலே உம்மை நேசிக்கும் எனது வாசகக்கடமைகளில் ஒன்றெனக் கருதுகிறேன். போய் வாரும்.

தோழமையுடன்
நந்தினி சேவியர்.

2.

பாண்டிருப்பைச் சேர்ந்தவரும் , ஈழத்தின் மிகமுக்கிய கவிஞரும் விமர்சகரும் சிறுகதையாளருமான சண்முகம் சிவலிங்கம்

இன்று அதிகாலை மரணமானார். இரவு படுக்கைக்குச் சென்றவர் காலையில் எழும்பவில்லை; மாரடைப்பு காரணமாக நித்திரையிலேயே அவர் இறந்துவிட்டார்.

இவரது மறைவு ஈழத் தமிழ் இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும்.

'நீர்வளையங்கள்', 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' என்ற சிறந்த இரண்டு கவிதைநூல்கள் மட்டும் இதுவரை வெளிவந்துள்ளன. மார்க்சிய அழகியல் ரீதியில் அமைந்த விமர்சனக் கட்டுரைகள் பலவற்றை எழுதிஉள்ளார் ; கவிஞர் மஹாகவியின் முக்கியத்தினை நிலைநிறுத்துவதில் இவரது கட்டுரைகள் கவிஞர் நுஹ்மானின் பணிகளுடன் துணைநின்றன!

இவரது கட்டுரைகளும் அழகிய சிறுகதைகள் பலவும் கையெழுத்துப் பிரதியிலுள்ள இரண்டு நாவல்களும் கவிதைகளும் நூல்வடிவம் பெறவேண்டியது அவசியம் ; அவை ஈழத்து இலக்கிய த்துக்கு வளம் சேர்ப்பவை!

-அ.யேசுராசா
20.04.2012

3.

ஈழத்தின் மிகமுக்கிய கவிஞரான சண்முகம் சிவலிங்கத்தை இழந்து விட்டோம். 1960 களில் எழுதத் தொடங்கியதில் இருந்து தன்னுடைய இறுதிக் கவிதை வரையில் ஈர்ப்புக் குன்றாமல், புதுமை குன்றாமல் எழுதி வந்தவர் சசி.

1939ம் ஆண்டில் பிறந்த சண்முகம் சிவலிங்கம் 1960 களில் எழுதத் தொடங்கியவர். 2012 வரையில் எழுதியவர்.

இதுவரையில் 'நீர்வளையங்கள்' [தமிழியல் 1988], 'சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' [காலச்சுவடு 2010] என்ற இரண்டு கவிதை நூல்களாக இதுவரை வெளிவந்துள்ளன.

ஆனால், சண்முகம் சிவலிங்கம் எழுதிய சிறுகதைகள் எவையும் இன்னும் தொகுக்கப்படவில்லை. அவர் ஒரு நாவலை எழுதி வைத்திருந்ததாகவும் கேள்வி.

இதைவிட, விமர்சனங்களையும் எழுதி வந்தார்.

இலங்கையின் கிழக்கே கல்முனை நகருக்கு அருகே உள்ள பாண்டிருப்பில் கவிஞர் சண்முகம் சிவலிங்கம், இந்தியாவின் கேரள மாநிலத்தில் உயர்கல்வி பயின்று அறிவியல் துறையில் பட்டம்பெற்றவர். அறிவியல் துறை ஆசிரியராக பணியில் இணைந்து பின்னர் பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார்.

இரவு படுக்கைக்குச் சென்றவர் இன்று [20-04-2012 வெள்ளிக்கிழமை]

காலையில் எழும்பவில்லை; மாரடைப்பு காரணமாக நித்திரையிலேயே அவர் இறந்துவிட்டார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கவிதைக்குப் புதிய பரிமாணங்களைத் தந்து தனித்த அடையாளமாகத் துலங்கிய சண்முகம் சிவலிங்கத்தின் இழப்புப் பெரிதே.
-கருணாகரன்

4.

சசிக்கு

சீரற்றுக் குலைந்த இதயத்தின் பெருந்துடிப்பு
மூன்றாம் யாமத்தில் என்னை எழுப்பியபோது
முகமும் நினைவும் வியர்வையில் நனைய
தலைமாட்டில் எப்போதும் இருக்கும்
நைட்ரோகிளிசரீனைப் பற்றுகிறேன்
அது சிவப்பு நிறம்
சசி,
உன்னுடையதும் சிவப்பு நிறமா?

நேற்றிரவு
தூரத்தில் இரைகிற கடல் இல்லை
வியப்பு இல்லை
பரல் கற்களின் மீது சொற்களற்றுப் புரண்டு செல்லும்
சிற்றாறு இல்லை

கலவி முடிந்த பின்
தூக்கத்தில் துவண்டிருக்கும் அவள் மீது
நீ வீசியெறிந்த சாரம்
கவிதைக்குள் ஒளிந்து விட்டது
மகனின் இருமல் நின்றுபோய்
நீண்ட நாளாகி விட்டது
அவனைக் கொண்டுபோன காற்றும் நெருப்பும்
உன் வாயிலுக்கு வராது

படையினர் மட்டுமே கேலிச் சிரிப்புடன்
அலையும் நடு இரவில்
மெல்லிய சாராய மணத்துடன்
தெருவில் இருந்து ஒழுங்கைக்குள் திரும்புகிறது
ஒரு சைக்கிள்
அதில் நீ இல்லை.

சேரன், 20-04-2012

(சண்முகம் சிவலிங்கம் (1939-2012)

5.

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்கள் காலமானார் என்ற செய்தி திடுக்கிடும் வகையில் வந்த சேர்ந்தள்ளது. சண்முகம் சிவலிங்கம் அவர்கள் நமது காலத்தின் மிக முக்கியமான ஆளுமைகளில் ஒருவர். அற்புதமான கவிஞர்@ படைப்பாற்றல் மிக்க கவித்துவமான மொழியில் அருமையான சிறுகதைகளைத் தந்த சிறுகதையாசிரியர்@ சிந்தனையைத் தூண்டும் ஆழமான கட்டுரைகளைத் தந்த சிந்தனையாளர். அவரது நூலுருவில் வெளிவராத படைப்புக்கள் இன்னமும் பல உள்ளன. அதிகமா...கப் பேசப்படாவிட்டாலும் சீரிய வாசகர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவரும் பெரும் மதிப்புக்குரியவராக திகழ்ந்தவருமான ஒரு அரிய படைப்பாளியை நாம் இன்று இழந்துவிட்டோம்.. அவரது அகால இழப்பு ஆழ்ந்த துயர் தரும் ஒரு அதிர்ச்சியூட்டும் நிகழ்வாகும். ஈழத்தின நவீன கவிதைப் பாரம்பரியத்தின் இரண்டாந் தலைமுறைக் கவிஞர்களுள் ஆழமும் வீச்சும் கொண்ட ஒரு கவிஞராக தன்னை வெளிப்படுத்தியவர்அவர்;. ஈழத்தின் தமிழ் படைப்புலகின் தரத்திற்கு பெருமை சேர்த்த அவரது இழப்பை ஆழ்ந்த துயரத்தடன் அனைவருடனும் பகிர்ந்துகொள்கிறேன்.

எஸ். கே விக்கினேஸ்வரன்.

இடுகையிட்டது துவாரகன் நேரம் Saturday, April 21, 2012

இதை Google இல் பரிந்துரைக்கவும்

Share Report Abuse Next Blog» Create Blog Sign In

நிறப்பிரிகை

செயல் - அதுவே சிறந்த சொல்

Saturday, April 21, 2012

சண்முகம் சிவலிங்கம் மரணமானார்

சண்முகம் சிவலிங்கம் மரணமானார்

பாண்டிருப்பைச் சேர்ந்தவரும் , ஈழத்தின் மிகமுக்கிய கவிஞரும் விமர்சகரும் சிறுகதையாளருமான சண்முகம் சிவலிங்கம் இன்று அதிகாலை மரணமானார். இரவு படுக்கைக்குச் சென்றவர் காலையில் எழும்பவில்லை; மாரடைப்பு காரணமாக நித்திரையிலேயே அவர் இறந்துவிட்டார்.

இவரது மறைவு ஈழத் தமிழ் இலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும்.

நீர்வளையங்கள், **சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்** என்ற சிறந்த இரண்டு கவிதைநூல்கள் மட்டும் இதுவரை வெளிவந்துள்ளன. மார்க்சிய அழகியல் ரீதியில் அமைந்த விமர்சனக் கட்டுரைகள் பலவற்றை எழுதிஉள்ளார் ; கவிஞர் மஹாகவியின் முக்கியத்தினை நிலைநிறுத்துவதில் இவரது கட்டுரைகள் கவிஞர் நுஹ்மானின் பணிகளுடன் துணைநின்றன!

இவரது கட்டுரைகளும் அழகிய சிறுகதைகள் பலவும் கையெழுத்துப் பிரதியிலுள்ள இரண்டு நாவல்களும் கவிதைகளும் நூல்வடிவம் பெறவேண்டியது அவசியம் ; அவை ஈழத்து இலக்கிய த்துக்கு வளம் சேர்ப்பவை!

Posted by Ravikumar at 10:55 AM

'யாவரும் கேளிர்' மடற்குழுவில் உறுப்பினர் ஆகுங்கள்

'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே '
என்ற கணியன் பூங்குன்றனின் பாடல் வரிகளை மனதில் கொண்டு தமிழ்ச் சமூகத்தில் சமத்துவ உணர்வைப் பரவச் செய்யும் நோக்கோடு செயல்படும் மடற்குழு . இந்தியச் சமூகத்தின் படிநிலை அமைப்பு இணையத்தில் உருவாகிவிடாமல் காப்பது இதன் நோக்கம் .

இந்த மடற்குழுவில் உறுப்பினராக இந்த மின்னஞ்சலுக்கு எழுதுங்கள்
yavarumkelir@googlegroups.com

இதுவரை இந்த வலைப்பூவுக்கு வந்து வாசித்தவர்கள்

40,615

புதிய பதிவு

Home

Popular Posts

அலி ஆகி ஆடி உண்பார்
திரு க ப அறவாணன் அவர்கள் தொகுத்து வெளியிட்டிருக்கும் அறநூல்கள்